V2. No2.

Feb 1929

JL
R673 m211, N28
N29.2.2
187128

839

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 2—No. 2.

OFFICE OF THE REGISTRAR
12 FEB 1929

ஓம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் உ | விபவ ஆண்டு மாசித் திங்கள்<br>1929 ஹு பிப்ரவரி மீ | இதழ் உ |

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| சமயத்தின் சாரம் ... ... | 29 |
| சுந்தரமூர்த்தி நாயனாரும் அவர் இல்லறமும் ... | 37 |
| குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை ... | 40 |
| ஔவை ... ... ... | 45 |
| சைவப் பெரியாரின் தனிக்கூட்டத்தின் அவசியமும் வேலையும் ... ... ... | 49 |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.

உதவி ஆசிரியர் :—வல்லை. பாலசுப்பிரமணியன், B. A.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
சென்னை.

1929

## திருக்குறள் விளக்கம்

இந்நூற்கண் திருவள்ளுவர் திருக்குறள் மூலமும், பரிமேலழகர் உரையும், விளக்கமும் சேர்ந்திருக்கின்றன. இவ்விளக்கவுரை ஆசிரியர் மாணுக்கர்க்கு அறிவுறுத்துவது போல வரையப்பட்டிருக்கிறது. திருக்குறள் பயில்வோர்க்கு இப்பதிப்புப் பெருந்துணை செய்யுமென்பதில் ஐயமில்லை. நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிடப் பட்டுளது.

| | | |
|---|---|---|
| அறத்துப்பால் கலிகோ பயிண்டு | விலை ரூபா | 3 4 0 |
| பொருட்பால் ,, | ,, | 4 8 0 |
| காமத்துப்பால் ,, | ,, | 1 12 0 |

பண்டிட் - K. குப்புச்சாமி முதலியார்,
திருக்குறள் விளக்க ஆசிரியர்,
3/2, பிள்ளையார்கோவில் தெரு, கிருஷ்ணம்பேட்டை, திருவல்லிக்கேணி.

## குமரன் வாரப்பதிப்பு

சமாசாரப் பத்திரிகைகளினால் அறிய வேண்டிய எல்லா விஷயங்களும், அரிய கட்டுரைகளும், வியாபார விஷயங்களும், மற்றும் பல விஷயங்களும் வெளி வருகின்றன.

வருடச் சந்தா உள்நாடு ரூ. ௫—0—0
,, வெளிநாடு ரூ. ௬—0—0
தனிப்பிரதி ரூ. 0—௧—௬

## குமரன் மாதப்பதிப்பு

இது தமிழ்ச் சுவை யறிவார்க்குத் தேனென இனிக்கும் ஓர் இனிய மாதப் பத்திரிகை. எனையோர்க்கும் விளங்கக் கூடிய பல கட்டுரைகளும் விநோதப் பகுதிகளும் வெளிவருகின்றன.

வருடச் சந்தா உள்நாடு ரூ. ௧—௮—0
,, வெளிநாடு ரூ. ௨—0—0
தனிப்பிரதி ரூ. 0—௨—0

எப்பொழுது சேர்ந்தாலும் தை மாத முதலே கணக்கு வைக்கப்பெறும்.

மானேஜர்,
Ex. குமரன் ஆபீஸ், காரைக்குடி.

## செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்க மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முக சுந்தர முதலியார், எம். ஏ. எல். டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்றமடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில் செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகளும், குல திலகர் சரித்திரங்களும், வீரதாதி பண்டிதைகளின் ஐதீகங்களும் வெளிவருகின்றன. இதை ஒவ்வொரு செங்குந்தரும் ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்.

தபாற்கூலி உட்பட வருஷ சந்தா ரூ.அ.பை.

| | |
|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1 8 0 |
| பிறைங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா முதலிய இடங்கட்கு | 2 0 0 |
| தனி சஞ்சிகை | 0 2 6 |

"செங்குந்த மித்திரன்" ஆபீஸ்,
நெ. 31, அரண்மனைக்காரன் தெரு,
Ex. சென்னை.

## பரம இச்சா ஞான தீபிகை

D. கோபால செட்டியாரால் மொழி பெயர்க்கப்பட்டது
விலை ரூபாய் ஒன்றே.

அநாதி முத்த சித்துருவாகிய சிவபெருமானின் இச்சா ஞான சக்திகளின் சுபாவத்தையும், விரிவான தொழிற்பாடுகளையும் குறித்து இந்த ஞானநூல் எழுதப்பட்டுள்ளது. இதுவரையில் கிரகிக்க முடியாத சிதம்பர இரகசியங்கள் போன்ற அநேக தத்துவ சாஸ்திர உண்மைகள் இந்நூலில் யாவருமறிய முதல் முதல் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலை அநேக ஆங்கிலேய பத்திரிகைகளும் தமிழ்ப் பத்திரிகைகளும், சைவ சித்தாந்த நிபுணர்களும் வியந்து பேசுகிறார்கள்.

வேண்டியவர்கள் அடியில் கண்டவருக்கு எழுதவும் :

D. கோபால செட்டியார், (முன் "நியு ரிபார்மர்" பத்திராதிபர்)
இராயப்பேட்டை போஸ்ட், சென்னை.


ஓம்

# சித்தாந்தம்

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"


மலர் ௨ | விபவ ஆண்டு மாசித் திங்கள் 1929 ஆம் ஃபிப்ரவரிமீ | இதழ் ௨


## சமயத்தின் சாரம்

ஹிந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகக் காரியதரிசி ஸ்ரீமான் சி. எஸ். சுவாமிநாத முதலியார் அவர்கள் (25-1-29) வெள்ளியன்று சைவ சித்தாந்த மகா சமாஜ சார்பில் அமைச்சர் கனம் S. முத்தையா முதலியார் அவர்கள் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவு வருமாறு :—

மற்ற உலக விவகாரங்களைப் போலவே சமயத் துறையிலும் சாதாரண அறிவைப் பயன்படுத்திச் சிந்தித்தல் அவசியமாகும். சமயம் என்பது அசாதாரணமான, இயற்கைக்கு மாறான ஒன்றன்று. உண்மைச் சமயம், சாதாரண புத்திக்கும், ஆராய்ச்சி அறிவுக்கும் மிக மேன்மை தருவதொன்றாகும். ஆதலின் ஆராய்ச்சி அறிவிற்கும் சாதாரண புத்திக்கும் பொருத்தமான முறையிலேயே நாம்சமயத்தைக் குறித்துப் பரிசீலனை செய்து அதை வாழ்விலும் கொண்டுவர வேண்டும்.

சமயம் என்பது ஒரு சாஸ்திரம்; அஃது ஒரு கலையுமாகும். மின்சாரத்தைப் பற்றி சாஸ்திர முறையாக ஒருவன் ஆராய்ச்சி செய்யலாம். பின்னர் அவன் அம் மின்சாரத்தைத் தன் வீடுகளில் விளக் கேற்றுவதற்கும், விசிறிகள் அமைப்பதற்கும் உபயோகப்படுத்தலாம். இது போன்றே சமயத்தையும் ஓர் அறிவியல் என்ற முறையில் ஆராய்ச்சி செய்து அதன் தத்துவங்களை உணரலாம். ஆனால் அத் தத்துவங்களை வாழ்க்கையில் அனுஷ்டானத்தில் கொண்டுவந்தாலன்றி வெறும் ஆராய்ச்சியினால் மட்டும் எவ்வகைப் பயனும் விளையாது. சமயம் சாஸ்திரங்களுக்குள் தலைசிறந்த சாஸ்திரம்; கலைகளுக்குள் மகோந்நதமான கலை.

மனிதன் இரண்டு வழிகளில் வளர்ச்சிபெறுகின்றான். தான் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தும், புலன்களைக் கட்டுப்படுத்தியும், எண்ணங்களைத்

தூய்மை செய்தும், உள்ளத்தை திடப் படுத்தியும் வளர்ச்சி பெறுதல் ஒருவழி. தன்னுடைய சகோதர மனிதர்களிடத்தும், மற்ற உயிர்ப் பிராணிகள் எல்லாவற்றினிடத்தும் தான் நடந்து கொள்ளும் விதத்தை ஒழுங்கு செய்வதின் மூலம் முன்னேற்றமடைதல் மற்றொரு வழி. இவ்விருவழிகளிலும் மனிதன் பூரணவளர்ச்சி பெறும் போது பிறவிப் பயன் எய்தியவனாகிறான்.

மற்ற விஷயங்களில் போலவே, சமயத்திலும், மனிதன் அவசியமெது, அநாவசியமெது, உண்மை எது, பொய் எது, அதிக முக்கியமானது எது, குறைந்த முக்கியமுடையது எது என்பவற்றைப் பகுத்தறிய வேண்டும். இல்லாவிடில் குழப்பமும், முயற்சி நஷ்டமும் விளையும். அதிலும், தற்காலத்தில் வாழ்க்கைப் போராட்டத்துக்கே மனிதனுடைய சக்தி யெல்லாம் வேண்டியதா யிருக்கும் தருணத்தில், முக்கியமில்லாத விஷயங்களில் காலத்தைச் செலவு செய்தல் பெருந் தவறாகும். மற்றும், இந்நாளில், மனிதனுடைய வாழ்வு ஒரு கிராமம், ஒரு பட்டணம் அல்லது ஒரு தேசத்தின் அளவாகக் கட்டுப்பட்டுக் கிடக்கவில்லை. உலக முழுவதும் இதுகாலை ரயில் பாதைகள், நீராவிக் கப்பல்கள், ஆகாய விமானங்கள் முதலியவற்றால் ஒன்று பிணைக்கப் பட்டிருக்கின்றது. ஒவ்வொரு தேசத்திலுமுள்ள பற்பல ஜாதியினரும் கலந்து பழகி வருகின்றனர். விரைவான போக்கு வரவு சாதனங்களினாலும், தந்தி, ஆகாயத் தந்திகளினாலும் தூரம் என்பதே இல்லாமற் போய் விட்டது. இத்தகைய காலத்தில் ஒருவன் உலகினின்று பிரிந்து தனிவாழ்க்கை நடத்துதல் இயலாத காரியம். உலகின் நான்கு புறங்களிலும் உற்பத்தியாகிப் பாய்ந் தோடும் பலவகைச் சக்திகள், ஒரு புறத்தில் மனிதனுடைய வளர்ச்சிக்குச் சாதனங்களாயிருந்து வருகின்றன. மற்றொரு புறத்தில் அச்சக்திகளுக்கு ஈடு கொடுக்கும் முயற்சியில் மனிதன் பெரிதும் களைப்படைந்து போகிறான்; அவன் காலமும் பெரிதும் நஷ்டமாகின்றது. இத்தகைய நிலைமையில், மக்கள் பல் வேறு வழக்கபழக்கங்களையுடைய சாதியார்களுடன் கலந்து பழகவேண்டியதாயிருக்கும்போது, ஒருவன் அமுக்கியமான விஷயங்களை நீக்கி, முக்கிய விஷயங்களில் கவனம் செலுத்தினால் மட்டுமே வாழ்க்கையின் முழுப்பயனையும் அடைதல் கூடும். முக்கிய மற்ற விஷயங்களில் ஆழ்ந்து விடுதல், பல் வேறு சமூகங்களும் கலந்து பழகுவதற்குத் தடையாகி, பரஸ்பரம் அனைவருடைய முன்னேற்றத்துக்கும் இடையூறாக முடிகின்றது.

எனவே, சமய ஆராய்ச்சியில் தலைப் படுவோன் ஒருவன் அறிவுடையவனாயின், சமயத்தின் முக்கிய தத்துவங்கள் யாவை என்பதை உணர்ந்து அவற்றை வாழ்வில் கொண்டுவர வேண்டும். அமுக்கியமான விஷயங்களில் அதிக காலத்தையும், ஊக்கத்தையும் வீணாக்காமல், அவற்றிற்குரிய கவனம் மட்டுமே செலுத்தவேண்டும்.

இறைவனை அடையும் வழியைக் காட்டுவதே சமயம் எனப்படும். இறைவன் ஒருவனே யாதலால், சமயமும் ஒன்றாகவே யிருக்க முடியும். பல்வேறு பெயர்களை யுடைய சமயங்களின் முக்கிய தத்துவங்களை ஆராய்ந்தால் அவற்றில் அடிப்படையான ஒற்றுமை நிலவுவதைக் காணலாம். முக்கிய மில்லாத விஷயங்களில்தான் வேற்றுமைகள்

13/128



தோன்றுகின்றன. எனவே, எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படையாகவுள்ள முக்கிய தத்துவங்களை நாம் அகிலப் பொது சமயம் என்று அழைத்தல்கூடும். பல் வேறு பெயர்களையுடைய சமயங்கள் எல்லாம் இவ்வகிலப் பொது சமயத்தின் அம்சங்கள் அல்லது பகுதிகளே யாகும்.

இவ்வாறு வெளிப்படையில் பிரிந்து நிற்கும் சமயம் ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட தத்துவ முறையும், ஒழுக்க நெறியும், சடங்குகள் முதலியவையும் உண்டு. இவற்றுள் மத்தியில் நிற்கும் ஒழுக்கநெறி அல்லது சன்மார்க்கமே எல்லாவற்றினும் முக்கிய முடையது. ஏனெனில் உண்மையான சமயவாழ்வு சன்மார்க்க வாழ்வேயாகும். மற்ற இரண்டும் ஒருவன் சன்மார்க்கவாழ்வு நடத்துவதற்குத் துணை செய்யும் அளவிலேயே பயனுடையவையாம்.

இவை ஒவ்வொன்றுக்கும் உரிய இடத்தை மனிதன் மறந்து விட்டால், முக்கிய மற்ற விஷயங்களிலேயே அவன் ஆழ்ந்து விடக்கூடும். அப்போது தத்துவ ஞானம் வெறும் வறட்டு அறிவுப் பயிற்சியாகவே முடிகின்றது. அப்பயிற்சியில் ஈடுபட்டவன் அதனாலேயே வாழ்க்கை இலக்ஷியத்தை அடைந்து விட்டதாக எண்ணி மயக்க முறுகிறான். இவ்வாறே, சடங்குகள் முதலியன மனதையும், உடம்பையும், உணர்ச்சிகளையும் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு மட்டுமே ஓரளவு உபயோகமுள்ளவை என்பதையும், வேறு முறைகளினால் மனதையும் புலன்களையும் கட்டுப்படுத்தியவனுக்கு அவற்றினால் பயனில்லை யென்பதையும் மக்கள் மறந்து விடும் போது, அச்சடங்குகள் சாதிகளுக்குள்ளும் சமூகங்களுக்குள்ளும் தடைச் சுவர்களை எழுப்புவதற்கு மட்டுமே பயன் படுகின்றன. இவ்வாறு, உண்மைச் சமய வாழ்வு நடத்துவதற்கு அவை ஒரு சாதனமா யிருப்பதற்குப் பதிலாக, அவையே சாதனமும் இலக்ஷியமுமாகக் கருதப்பட்டு உண்மைச் சமய வாழ்வுக்கு ஊறு விளைக்கின்றன.

சாஸ்திரங்களைப் படிக்கும் விஷயத்திலுங்கூடப் பகுத்தறிவு அவசியம். ஒவ்வொரு சமயத்திலும் மூலாதார தத்துவங்களைப் பற்றிச் சொல்லும் மறை நூல்கள் இருக்கின்றன. இவை யல்லாமல், புராணங்கள், சன்மார்க்க வாழ்வைப் போதிக்கும் தர்ம சாஸ்திரங்கள் முதலியவை இருக்கின்றன. புராணங்கள் முதலியவை சம்பந்தமான ஆராய்ச்சிக் கண்டனங்களைக் குறித்து நாம் பயப்படுதல் கூடாது. கிறிஸ்துவ சமயத்தில் உயர் முறையில் செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கண்டனங்களினால் என்ன தீமை விளைந்தது? கிறிஸ்து நாதர் போதித்த சன்மார்க்க தத்துவங்களைக் கடைப்பிடித்து நடந்த உண்மைக் கிறிஸ்துவன் அவற்றினால் சிறிதும் பாதிக்கப் படவில்லை. சமயத்தின் சாரத்தை உணராமல், கிறிஸ்துவினிடத்தும், தம்மை நம்பியவர்களைக் காப்பாற்றக் கூடிய அவருடைய சக்தியினிடத்தும் நம்பிக்கை கொள்வதினால் மட்டுமே ஆண்டவன் அருகில் சரியாஸனம் பெற்று அமரலாம் என்று எண்ணியிருந்தவர் மேற்படி கண்டனங்களினால் குழப்ப மடைந்திருக்கக்கூடும். நமது புராணங்களில் உட்பொருள்கள் கொண்ட கற்பனைகளும் கதைகளும் இருக்கலாம். மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்கள் இருக்கலாம். சாதாரண ஜனங்களின் மனதில் ஓர் உண்மையை அல்லது ஒரு கருத்தைத் தெளிவாகப் பதி

யச் செய்வதற்காகச் சில உதாரணக் கதைகள் சொல்லப்படலாம். முழுதும் உண்மையான கூற்றுக்களும், அவ்வாறே சிறிதும் பொருளற்ற அல்லது உண்மையற்ற விஷயங்களுங் கூடச் சொல்லப்பட்டிருக்கலாம். எனவே, புராணங்கள் சம்பந்தமான ஆராய்ச்சியை நாம் வரவேற்கவே வேண்டும். புராணங்களிலும், அவற்றில் காணப்படும் பொருள்களிலும் பகுத்தறிவின் மூலம் நல்லவை, கெட்டவை என்று பிரிக்க நாம் தயாரா யிருக்க வேண்டும். "சமயத்திற்கு ஆபத்து" என்னும் பிழைபட்ட ஆவேசத்தில் ஆழ்ந்து, மேற்படி புத்தகங்களில் காணப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் வேதவாக்காக நாம் கொள்வோமாயின், நாம் நிலைநிறுத்த விரும்பும் சமயத்தைக் கொல்வதற்கே துணை செய்தவர்களாவோம். அறிவொளியைக் கண் கூசாமல் பார்ப்பதற்கு நாம் ஆற்றல் பெறவேண்டும். ஒவ்வொன்றையும் அவ்வொளியின் துணை கொண்டு நோக்க வேண்டும். மற்றும், பற்பல சமயத்தார்கள் சேர்ந்து வாழ்தல் அவசியமாகிவிட்ட இந்நாளில், சமயத்தின் சாராம்சங்களில் மட்டும் கவனம் செலுத்தி வருதலே நலமென்று கூறலாம். அத்தகைய அம்சங்களையே வலியுறுத்துவதினாலும், ஜனங்களின் கவனம் அவற்றின் மீதே செல்லும்படி செய்வதினாலும், நமது சமயத்திற்குச் சிறந்த தொண்டு செய்தவர்களாவோம். பயனற்ற தத்துவ நுட்பங்களில் தலையிட்டுக் காலத்தை வீணாக்குவதாலும், நமது புத்தகங்களில் காணப்படும் ஒவ்வொன்றையும் சரியென்று ஸ்தாபிக்கப் புறப்படுவதாலும் எவ்வித நலமும் விளையாது.

அங்ஙனமாயின், சமயத்தின் சாரம் என்பது தான் யாது? இதற்கு விடை கூறுவதற்கு முன், கடவுள் என்றால் என்ன என்பதை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். "அன்பே கடவுள்" என்னும் அடிப்படையான கொள்கையை எல்லாச் சமயங்களும் ஒப்புக்கொள்கின்றன. கிறிஸ்துவர்களின் விவிலிய வேதம் இப்படிக் கூறுகின்றது. திருமூலர் தமது திருமந்திரத்தில் இவ்வாறே சொல்கிறார். ஆகவே, அகிலப் பொது சமயம் போதிக்கும் தலை சிறந்த நெறி அன்பு நெறியேயாகும். வெவ்வேறு பெயர்களைக் கொண்ட பற்பல சமயங்களின் அடிப்படையான கொள்கையும் இதுவேயாம்.

கடவுளை மூன்று தத்துவங்கள் சேர்ந்த ஒரு பொருளாகக் குறிப்பிடுவதும் உண்டு. அவை முறையே சத், சித், ஆனந்தம் என்பவையாம். அன்பை மணந்த அறிவே சித் அல்லது ஞானம் எனப்படும். ஆனந்தம் அன்பினின்றே பிறப்பதாகும். எனவே, ஆழ்ந்து ஆராயுங்கால் வாழ்விற்கு அடிப்படையாயுள்ள உண்மைப்பொருள் அன்பு ஒன்றே என்பதும், அதனுடன் ஞானமும், ஆனந்தமும் பிரிக்க முடியாத வண்ணம் கலந்து நிற்கின்றன வென்பதும் பெறப்படுகின்றன. அவ்வன்பை அடைவதற்கு மக்கள் இரண்டு நற்குணங்களைப் பெறுதல் வேண்டும். அவை தூய்மையும், வலிமையுமாகும். இவையில்லாத அன்பு உண்மை அன்பாக மாட்டாது. எனவே, சமயத்தின் சாரம் அன்பேயாகுமென்றும், அவ்வன்பு பூரணமடைவதற்கு நாம் இன்றியமையாது வளர்க்க வேண்டிய குணங்கள் தூய்மையும், வலிமையுமேயாம் என்றும் நாம் தீர்மானிக்கலாம்



எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான, அடிப்படை தர்மங்கள் அன்பு, தூய்மை, வலிமை என்னும் இம்மூன்றுமேயாம். குடும்ப வாழ்க்கைக்குரிய சாதாரண அன்பைக் கருதினாலும், உலகமெல்லாம் தழுவிய உயரிய அன்பைக் கருதினாலும், தூய்மையற்ற அன்பு நஞ்சையொக்கும் என்பதிலும், வலிமையற்ற அன்பு பயனற்றதென்பதிலும் சந்தேகமில்லை. நமது புற உலக வாழ்க்கையே உலகப் பேரன்பாகிய குழவியை வளர்க்கும் தொட்டில் என்று கூறலாம். அவ்வன்பே ஆத்மாநுபூதி அல்லது கடவுட் பேறு. அத்தகைய அன்பை வளர்க்கும் முறையில் நாம் உலக வாழ்க்கை நடத்துவதற்குத் திருக்குறள் போன்ற நூல்கள் நமக்குத் துணை செய்யும். புராணங்களைப் படித்து அவற்றில் உள்ள உண்மையை அறிந்துகொள்ளப் போதிய அவகாசமில்லாதவர்கள் அவற்றைப் படிக்க வேண்டுவதே இல்லை.

உலக வாழ்க்கையில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் இறைவனை வழி பட வேண்டும்; அதாவது அன்பு செய்தல் வேண்டும். நமது சொந்தக் குடும்பத்திலும், வியாபார ஸ்தலங்களிலும், பாங்கிகளிலும், சட்டசபைகளிலும், கலைக்கழகங்களிலும், வைத்திய சாலைகளிலும், ஏழைகள் வசிக்கும் சேரிகளிலும், நமது சகோதர மனிதர்களிடம் நாம் நெருங்க நேரும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அன்பு வாழ்க்கையே நடத்த வேண்டும். நாம் எங்கிருந்தாலும் என்ன செய்தாலும், நமது தூய வாழ்க்கை என்னும் மௌனப் பிரசங்கத்தின் மூலம் சமயப் பிரசாரம் செய்து வரவேண்டும். சமயம் புண்ணிய தினங்களுக்கு மட்டுமோ, பூஜை அறைக்கு மட்டுமோ உரிய ஒன்றன்று. நரம்புக் குழாய்களில் இடைவிடாது ஓடும் இரத்த ஓட்டத்தைப் போலும், உடலின் ஓயாத மௌன வளர்ச்சியைப் போலும், நாம் என்ன நினைத்தாலும், செய்தாலும், அவற்றுளெல்லாம் சமய உணர்ச்சி ஊடுருவி நின்று வளர்ந்து வரவேண்டும். இவ்வுலகிலேயே, இவ்வுலக விவகாரங்களுக்கிடையிலேயே ஆண்டவனைக் காண வேண்டும். இவ்வுலகைவிட்டுத் தப்பிச் சென்று அவனைக் காணுதல் ஒருநாளும் இயலாத காரியம். சிற்சில தத்துவங்களில் நம்பிக்கை வைப்பதுமட்டும் சமயமன்று. அது வாழ்க்கையில் மேற்கொண்டு ஒழுகுதற்குரிய ஓர் ஒழுக்க முறையாகும். எழுத்து வாசனை யறியாத ஒரு மனிதன் உண்மைச் சமய வாழ்வு நடத்தலாம். எல்லாச் சமய நூல்களையும் கற்றுணர்ந்த பண்டிதன் சமய வாழ்வுக்குப் புறம்பானவனாயிருக்கலாம். நல்லவனாயிருந்து நன்மை செய்யும் கலையே சமயமாகும். சமய வாழ்வில், குறிப்பிட்ட புண்ணியச் செயல்களைப் புரிதல் அவ்வளவு முக்கியமன்று. எந்த வினை செய்தாலும், அதைக் கடவுள் நெறியில் செய்தலே முக்கியமானது. வாழ்க்கையில் சிற்சில இலட்சியங்களையுடைய ஒரு மனிதன், வழியில் எத்தனை சோதனைகள் நேரிட்டாலும் அவற்றிற் ஈடுகொடுத்து மேற்படி இலட்சியங்களைக் கடைப்பிடித்து ஒழுகல் வேண்டும்.

மக்கட் குலத்தினரையெல்லாம் தன் சொந்த சகோதரர்களாகக் கருதி அவர்களுக்குத் தொண்டியற்றும் மனிதன் ஒருவன் உண்மைச் சமய வாழ்வு நடத்துபவனாவான். அவன் தன்னை யறியாமலே இறைவன் இதயத்தில் வாசஞ்

செய்கிருன். இறைவன் உண்மையையும், சமயத்தையும் ஒப்புக்கொள்ளும் ஆஸ்திகன் மேற்கூறியவனையும் பாரமார்த்திக மார்க்கத்தில் தன் தோழனுக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவனைக் கண்டித் தொதுக்குதல் கூடாது. இதுவே உண்மையான சமயத் தொண்டாகும்.

குறிப்பிட்ட ஒரு சமயத்தைச் சேர்ந்தவர்கள் நாளடைவில் வளர்ந்து விட்ட குருட்டு நம்பிக்கைகளில் ஆழ்ந்துபோனவர்களாயிருப்பின், கடவுளுக்கும், உண்மை அன்புக்கும் நேர் விரோதமான ஆசாரங்களிலிருந்து விடுதலைபெற தைரியம் அற்றவர்களாயிருப்பின், அவர்களும், அவர்கள் கொள்கைகளும் தாக்கப்படுவதில் ஆச்சரியப்படுவதற்கு இடமில்லை. சமயம் என்பது பயனற்ற ஒன்று என்னும் எண்ணம் பரவுவதற்கு அவர்களே பொறுப்பாளிகளாவர். அவர்கள் கைக் கொண்டொழுகும் பொய்ச் சமயம் எவ்வளவு விரைவில் அழிந்துபடுகின்றதோ அவ்வளவும் நன்மை. அதனுல் உண்மைச் சமயம் தன் மாசு நீங்கி ஒளியுடன் பிரகாசிக்கும். சமயத்தின் சாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினுல், அதைச் சுற்றிக் காடாக வளர்ந்துள்ள களைகளை நீங்களேதான் பிடுங்கி யெறிதல்வேண்டும். அக்களைகளைச் சுட்டிக் காட்டி நிந்திப்போரையும் நீங்கள் வரவேற்கவே வேண்டும். பதிலுக்கு நிந்தனை முறையைக் கைக்கொள்வதினுல் சிறிதும் பயன் விளையாது. அதற்குமாருக, உங்கள் வாழ்க்கையினுலும், தூய ஒழுக்கத்தினுலுமே அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். பயிர் செழிக்கும் பொருட்டுக் களைகளைப் பிடுங்கி எறியுங்கள். குறிப்பிட்ட சில தத்துவ வாதங்களை ஒப்புக் கொள்ளுதலும், பொருள் தெரியாமல் காலையும் மாலையும் மந்திரக் கடன்களை முடிப்பதும், மற்றும் சாஸ்திரங்கள் கூறும் சடங்குகளைச் செய்வதுமட்டுமே சமயம் என்று நாம் நம்பியிருக்கும் வரையில் நாம் உண்மைச் சமயத்திலிருந்து வெகு தூரத்தி லுள்ளவர்களே யாவோம். இதனுல் மேற் கூறியவைக ளெல்லாம் பயனற்றவை என்பதாக நான் சொல்லவில்லை. அவை ஓரளவு உபயோகமானவைதான். அவற்றிற் குரிய ஸ்தானம் எதுவென்பதை உணருதல் அவசியம்.

சமயத்தின் சாரத்தை நாம் நன்கு பற்றிக் கொள்வோமாயின், சாதிவேற்றுமைத் தடைகள், பிறவிக்கர்வம், பழைய சம்பிரதாயங்களைக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றுதல், தீண்டாமை, பாராமை, இன்னும் இது போல் மனிதனை மனிதனிடத் திருந்தும் சமூகத்தைச் சமூகத்தினிட மிருந்தும் பிரிக்கும் எல்லாம் ஒழிந்துவிடும். இத்தகைய விரும்பத் தகாத ஆசாரங்கள் எவ்வளவு பழமையானவையாயினும் சரியே அவற்றை நாம் சகித்துக் கொண்டிருக்குமளவுக்கு கடவுளிடத்தும், சமயத்தினிடத்தும் நமது நம்பிக்கை பொய்மையுடையதேயாகும். இந்தப் பொய்மை ஒருகால் நம்மையறியாது ஏற்படுவதா யிருக்கலாம். ஆனுல் அறிவுடைய மனிதன் ஒருவன் ஒவ்வொரு காரியத்தையும் முழு விழிப்புடனும், சுய அறிவுடனுமே செய்தல் வேண்டும். அன்புருவான ஆண்டவனிடம் நம்பிக்கைகொண்டவர்கள் எனச் சொல்லிக்கொள்வோர் மேற்கூறிய தளைகளை அறுத்தெறிந்து விடுதலை பெறுர்களாயின், அவர்கள்



தங்கள் சமயமே அடியோடு தாக்கப்படுவது குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை. நாம் உள்ளிருந்து சீர்திருத்தம் பெருவிட்டால் வெளியில் கலகம் ஏற்பட்டே தீரும். வாழ்வைக் குறுக்குவதும், கடவுள் நெறிக்கு மாறுபட்டதுமான ஆசாரங்களையும், சம்பிரதாயங்களையும் நாம் தொலைத்துத் தலைமுழுக வேண்டும். அவை உண்மைச் சமயத்தின் முக்கியாம்சங்கள் அல்ல. எனினும், சமயத்தின் பெயர் தாங்கி உலவுகின்றன. இத்துறையில் நமக்கு வழிகாட்ட நமது பெரியோர்களின் அருள் மொழிகள்நமக்கில்லாமலில்லை. உதாரணமாக, சமீப காலத்திலிருந்த உண்மைச் சமய சீர்திருத்தக்காரரான ஸ்ரீராமலிங்க சுவாமிகளின் பாடல்களைக் குறிப்பிடலாம். அவர் பாடல்களில் உண்மை அன்பின் மணம் வீசப் பெறுவதைக் காண்கிருேம். சர்வசமய சமரசமும், சகல ஜீவ சகோதரத்துவமுமே அப்பாடல்களின் சிறப்புப் பொருள்களாக விளங்குகின்றன.

சாரமெது, சக்கை யெது என்று நாமே ஆராய வில்லையானுல், சமயத்தை அடியோடு தாக்குபவர்களைக் குற்றங் கூறுவதில் பயனில்லை. சமயத்தின் பெயரால் நமது வாழ்க்கையைப் பிணித்துள்ள சமய விரோத ஆசாரங்களையும், முக்கிய மற்ற சம்பிரதாயங்களையும் அவர்கள் வெறுப்பதின்காரணமாக நம்மை அடியோடு தாக்குகிருர்கள். நம்முடைய கோட்டையில் பல வீனமான இடம் எங்கும் இல்லாவிட்டால் நாம் கவலையுற அவசியமில்லையன்ருே? உண்மை அன்பு உணர்வுக்கும், உண்மைக் கடவுள் நெறிக்கும் விரோதமான அனைத்தையும் நாம் உதறித் தள்ளிவிடவேண்டும்? இல்லாவிடில் மற்றவர்கள் பலமாக நம்மைக் குலுக்கி விடக்கூடும். அதன் பயனுக, சமயத்தின் முக்கியமற்ற அம்சங்களுடன் முக்கியாம்சங்களும் ஒரு கால் - தற்காலிகமாகவேனும் - போய்விடலாம். வாய் வேதாந்தத்தினுல நம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது - வாழ்க்கை ஒழுக்கமே நம்மைக் காப்பாற்றக் கூடும் என்பதை எப்போதும் நினைவு கூரவேண்டும். நமது வாழ்க்கையில் ஒவ்வொரு செயலையும் கடவுளின் பெயரால் அல்லது அன்புடன் கூடச் செய்வதினுலும், பொது வாழ்க்கையிலும் அன்பு நெறிக்குமாருன அனைத்தையும் விலக்கி விடுவதினுலும், உடல், மனம், உணர்ச்சி ஆதியவற்றைக் கட்டுப்படுத்தி நேர் வழியில் செலுத்துவதினுலும், தயாளம், பொறுமை முதலிய குணங்களினுலும் நாம் சமயப் பிரசாரம் செய்யவேண்டும். இவையே நமது கடவுள் உண்மையை நிரூபிப்பதற்குரிய சான்றுகளாகும். உண்மை, நன்மை, அழகு என்னும் இவற்றையே நாடி, இவற்றிற் கிணங்க வாழ்வு நடத்தி, பிறருக்கும் அத்தகைய வாழ்வு நடத்த உதவி செய்வதே சமய வாழ்வின் சாரம். மனோ வாக்குக் காயங்களினுல் நாம் உயரிய அற வாழ்வு நடத்தி வரும் வரையில், சகுண தெய்வத்தை உபாசித்தலும் ஒன்றுதான்; உருவமற்ற ஓர் இலக்ஷியத்தையே கடவுளாகக் கொண்டு வழிபடுதலும் ஒன்று தான். ஆனுல், சகுணக் கடவுளே கிடையாதென்று நான் சொல்லவில்லை. வீரவழிபாடு மனிதன் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிவது. அஃது இயற்கைக்கொத்ததுமாகும். ஜீவ வர்க்கத்தின் அடிப்

படியிலுள்ள ஓரறிவுப் பிராணி முதல் மனிதன் ஈருக எத்தனையோ நிலைப் பட்ட உயிர்ப் பிராணிகள் இருக்கின் றன. அதுபோன்றே மனித வர்க்கத் தின் அடிப்படியில் உள்ள காட்டு மிராண்டி முதல் முடிந்த மெய்ப்பொரு ளான முழுமுதற் கடவுள் வரையில் எவ்வளவோ படித்தரங்கள் இருக்கின் றன. முடிவான நிலைக்குக் கீழேயுள்ள ஒருவரால் நாம் கவரப்படலாம்; அவரு டைய உதவி பெற்று நாம் முன்னேற்ற மடையலாம். இவரே நமது சகுண தெய்வம். கடவுள் உண்மையை ஒப்புக் கொள்ளாத அஞ்ஞேய வாதிகூட, தன க்கு மேலுள்ள ஒருவரால் கவரப்பட்டு அவரைப் போற்றுகின்றவரையில், சகு ணக் கடவுளை உபாசிப்பவனேயாகிறன்.

நமது இலக்ஷியத்தை நாம் உருவ மற்ற ஒரு கொள்கையாகவே கருதிப் போற்றி வரலாம். அல்லது அந்த இல க்ஷியத்தை ஓர் இலக்ஷிய புருஷனக மாற்றிப் பூசிக்கலாம். இந்த இலக்ஷிய புருஷன் நமது சாதாரணகண்களுக் குப் புலப்படலாம்; அல்லது புலப் படாமலிருக்கலாம். இறைவன் என் றோ, ரிஷியென்றோ, மகான் என்றோ, இரக்ஷகன் என்றோ அவனுக்குப் பெயர் கொடுக்கலாம். எப்படிச் செய்தாலும், என்ன பெயர் அளித்தாலும், நாம் ஓர் இலக்ஷியத்தைப் போற்றும் வரையில் காப்பாற்றப்படுவோம் என்று நம்ப இடமுண்டு. ஆனல் இலக்ஷியமாகிய உயிரை மறந்து நாம் வெறும் உடலை மட்டும் பற்றி நிற்கும்போது மரணம் நேரிடுதல் நிச்சயம். இலக்ஷியமாகிய உயிரை நாம் கைவிடாதிருக்கும் வரை மனிதர்களுக்கும், தேவர்களுக்கும்கூட அஞ்ச வேண்டுவதில்லை.

இத்துறையில் வெற்றி யடைவதின் இரகசியங்கள் இரண்டாகும். நம்மில் ஒவ்வொருவருக்குள்ளும் தெய்வத்தின் ஒரு பொறி இருக்கிறதென்பதை ஓயாது நினைவு கூர்ந்திருத்தல் அவற் றுள் ஒன்று. இலக்ஷியமானது நமது உயிருக்குயிராய் ஏற்கனவே நமக்குள் இருந்து வருகிறது. அதை வெளிக் கொணருவதே நாம் செய்ய வேண்டிய தாகும். இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும்பற்றி நினைந்து வீண் போக்காமல் நிகழ் காலத்தைப்பற் றியே நினைத்தல் இரண்டாவது இர கசியம். ஒருகண நேரமேனும் வீண் போக்காமல் இன்றே, இப்பொழுதே, இக்கணத்திலேயே, நமது உயரிய இலக்ஷியத்தை வாழ்க்கையில் கொணர முயலுதல் வேண்டும். சென்று போன வைகளைப் பற்றி வருந்துவதாவது, நல்வாழ்க்கை தொடங்குவதை நாளைக் காகட்டும் என்று தள்ளிப் போடுவதா வது கூடவேகூடாது. வருங்காலத்தைத் தற்காலத்திற்குக் கொணர்ந்து விடுவதே தீரமும், அறிவுடைமையு மாகும். கால மாகிய மாயையை வெற்றி கொள்ளும் வழி அது தான். கால, தேச, வர்த்த மானங்கள் எல்லாம் வெறும் மாயை யென்று வாயால் வாதம் புரிந்துகொண் டிருப்பதால் மட்டும் பயனில்லை. இங்கே, இப்பொழுதே, ஆண்டவ னுடைய இராஜ்யத்தைத் தேடுவோன்-தினசரி வாழ்க்கையில் தன் பொறுப்பை நன்குணர்ந்து சன்மார்க்கத்தைக்கடைப் பிடிப்போன் - சாதி, சமயம், நிறம், ஆண், பெண் முதலிய வேற்றுமை களைப் பாராட்டாமல் மக்கள் அனைவ ரிடத்தும் அன்பும், நேயமும், சகோதர பாவமும் பூண்டு வாழ்வோன் ஆகிய இத்தகையவனே உண்மைச் சமய வாழ்க்கை நடத்துவோனவன்.

---

# சுந்தரமூர்த்தி நாயனரும் அவர் இல்லறமும்

[E. N. தணிகாசல முதலியார், B. A., B. L.]

"நம்பியாரூரர் தடுத்தாட் கொள்ளப் பட்ட பின்னர் துறவியாய்ப் பலநாடு கள் திரிந்தனரன்றே? அக்காலங்களில் திருவாரூர் கணிகைக்கு வசமானதும் போதாது திருவொற்றியூரிற் சங்கிலியா லும் பிணிக்கப்பட்டனரே, இதென்ன தவம்! "இங்ஙனம் இவர் நடத்திய காரியங்கள் சம்மதிக்கத் தக்கனவோ"? எனப் பலர் வினவலாயினர். நூதன நாகரிகமும், மேல் நாட்டுக் கல்வியும் நிறைந்த இக்காலத்தின் மாத்திரமன்று; வன்றொண்டர் காலத்திலும் ஏயர் கோன் கலிக்காமர், இவர் செய்கை யடாதென மொழிந்தனர். ஆயினும் இறுதியில் அவர் அவ்வபிப்பிராயம் பிழையெனவு மறிந்தனர். இவற்றின் நுட்பங்களைச்சற்று ஆராய்வோமாக:—

மணப்பந்தலில் அடிமைச் சாசனம் காட்டும் ஆண்டவன் பின்னர் திரு வெண்ணெய் நல்லூருக்குச் சென்ற வன்றொண்டர், பிறவி மயக்கறுக்கப் பிஞ்ஞகர் வந்தனரென்றுணர்ந்தபோதே உலகப் பற்று யாவும் விட்டன ரென்ப தற்கு, அவர் முதற்பதிகத்தில் 4-ம் பாசுரத்தைக் காண்க:—

" பாதம்பணி வார்கள்பெறு
பண்டம்மது பணியாய்
ஆதன்பொரு ளானேனறி
வில்லேனரு ளாளா!
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணை
நல்லூரருட் டுறையுள்
ஆதீ! யுனக் காளாயினி
யல்லேனென லாமே?"

இவ்வாறு பற்று மற்றொன் றின்றி சிவபெருமான் பாதமே மனம் வைத்த வர், இறைவன் கட்டளை மீறாது மணக் கோலத்துடன் ஊர்கள்தோறுஞ் சென்றன ரென்று இவர் சரித்திரம் கூறும். அதற்கு அத்தாட்சியாய் " கந்த முதலாடை யாபரணம் பண்டாரத்தே யெனக்குப் பணித்தருள வேண்டும்" என்றும், "பட்டோடு சாந்தம் பணித் தருளா திருக்கின்ற பரிசென்ன பரிசோ?" என்றும் கடலுகைக் காரோ ணத் திருப்பதிகங்களிற் கூறினமை காண்க.

இவ்வாறு மணக்கோலம் நீங்கலாகா தென இறைவன் கட்டளை யிட்டதால், மணவினையூழ் வந்து சம்பவிப்பது திண்ணமே. அக்காலத்தில் அழகிற் சிறந்த மாதர்கள் பலர் உலகத்திற் காணப்பட்டும், வன்றொண்டர் அவர் களிடம் மையல் கொள்ளவில்லை. வனப் பகை சிங்கடி யென்னும் புத்திரிகளைக் கோட்புலி நாயனர் இவருக்குச் சமர்ப் பித்த ஞான்று, அன்னேரைத் தன் மக் களாயங்கீகரித்து அவர்கள் வனப்பை ஆங்காங்கு வியந்து கூறி, சிங்கடியப்பன் வனப்பகையப்பனெனத் தன்னைக் கூறு வாராயினர். இத்தகைய பெருந்தகை, பரவை நாச்சியார் கொழுன ஞனதும் இறைவன் கட்டளையாகவே காணப்படு கின்றது. "பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெரு மானே" என்றதால் சிவபக்தி முதிர்ச்சி யால் மணவினை முடிந்த தென்னலாமே யன்றி, காமத்தின் பயனாய கடிமண மென்பதற் கிடமில்லை. சங்கிலி நாச்சி யார் இவர் மனதில் மிகவுஞ் சிறப்பாய் விளங்கினர். ஆயினும் அவரை நீங்கித்

தென்னாட்டுக்குப் புறப்பட வைத்ததும் திருவாரூர் வீதிவிடங்கப் பெருமான் அன்றோ?

“ வங்கமலி கடனஞ்சை
வானவர்க ளாழுய்ய
நுங்கியமு தவர்க்கருளி
நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலியோ டெனைப்புணர்த்த
தத்துவனைச் சழக்கனேன்
எங்குலக்கப் பிரிந்திருக்கே
னென்னாரு ரிறைவனையே !”

என்று பாடித் திருவொற்றியூரை விட்டார். ஆயினும் அம் மனையாளைப் பிரிவதில்லையெனச் செய்த சத்தியந் தவறியதால், நம்பியாரூரர் கண்களிரண்டும் கெட்டன. இது இல்லறத்திற் செய்த பிழை. இவர் பெரியா ராதலால், தண்டனை அக்கணமே கிடைத்தது. ஆயினும் ஆராய்ந்து நோக்கின் அத்தகைய தண்டனைக் கருகராக்கும் குற்றம் அவர் செய்யவில்லை. இதற்கு,

“ விற்றுக் கொள்வீ ரொற்றியல்லேன்
விரும்பியாட் பட்டேன்
குற்றமொன்றுஞ் செய்ததில்லை
கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண்
கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்டான் றாராதொழிந்தால்
வாழ்ந்து போதீரே !”

என்னும் பாசுரத்தை நோக்குக.

சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியாரை விட்ட பிழை துறவறத்தின் துவக்கமாகவே காணப்படும்:—

“ மறிநே ரொண்கண் மடநல்லார்
வலையிற் பட்டு மதிமயங்கி,
அறிவே யழிந்தே னையாநான்
மையார் கண்ட முடையானே,
பறியா வினைக ளவைதீர்க்கும்
பரமா ! பழைய னூர்மேய !
அறிவே ! யாலங் காடா !வுன்
னடியார்க் கடியே னாவேனே ”

என்னும் பாசுரத்தின் கருத்தையுங் காண்க. ஆயினும், அவர் இல்லறத்திற் செய்தது பிழை யென்பதே, திருமுல்லை வாயில், திருவெண்பாக்கம் முதலிய தலங்களிற் கூறி வருந்துகின்றனர்:—

“ பிழையுளன பொறுத்திடுவ
ரென்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே
படலமென்கண் மறைப்பித்தாய் !
குழைவிரவு வடிகாதா !
கோயிலுளாயே யென்ன,
உழையுடையா னுள்ளிருந்து
வுளோம் போகீரென்றானே !” (1)

“ பொன்னவிலுங் கொன்றையினாய் !
போய் மகிழ்க் கீழிருவென்று
சொன்னவெனைக் காணாமே
சூளுறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே !
யிங்கிருந்தா யோவென்ன
ஒன்னலரைக் காண்டற்போ
லுளோம்போகீ ரென்றானே !” (9)

“ மான்றிகழுஞ் சங்கிலியைத்
தந்துவருபயன்களெல்லாம்
தோன்றவருள் செய்தளித்தா
யென்றுரைக்க வுலகமெலாம்
ஈன்றவனே ! வெண்கோயி
லிருந்தாயோ (ஒ) !வென்ன
ஊன்றுவதோர் கோலருளி
யுளோம்போகீ ரென்றானே !”

என்னும் திருவெண்பாக்கத் திருப்பதிகத்தாலும், திருவொற்றி யூருக்கு 5 மைலிலுள்ள வடதிரு முல்லைவாயிலில் 3-ம் பாசுரத்தில்,

“ விண்பணிக் தேத்தும் வேதியா !
மாதர் வெருவிட வேழமன் றுரித்தாய் !
செண்பகச்சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் ! தேவர்தம் மரசே !
தண்பொழி லொற்றி மாநகருடையாய்
சங்கிலிக்கா வென்கண் கொண்ட
பண்ப!நின் னடியேன் படுதுயர்களையாய்
பாசுப தாபரஞ் சுடரே !”

என்பதாலும் காண்க.



ஆகையால் வன்றொண்டர் தடுத்தாட் கொண்ட காலை சந்நியாசம் பூண்டாரென்று கொள்ள லாகாது. மணக் கோலத்துடனிருந்த பிரமசாரி இல்லறத்திற் சென்றது வருணாசிரம தருமத்திற்கும் முரணாகாது. இவர் சந்நியாசியானது திருவஞ்சைக் களத்தினின்று கைலாயத்திற்குச் செல்வதற்கு முன்பே யென்பதும் அவர் பாடல்களால் அநுமானிக்கலாகும். திருவஞ்சைக் களத்தில்,

“ வெறுத்தேன் மனைவாழ்க்கையை
[விட்டொழிந்தேன்
விளங்குங் குழைக்கா துடைவே தியனே
இறுத்தா யிலங்கைக் கிறையா யவனைத்
தலைபத்தொடு தோள் பலவிற்று விழக்
கறுத்தாய் கடனஞ் சமுதுண்டு கண்டங்
கடுகப் பிரமன் றலையைந் திலுமொன்
றறுத்தாய் கடலங் கரைமேன் மகோதை
யணியார் பொழிலஞ்சைகளத்
[தப்பனே !”

என்பதை நோக்கும் போது சுந்தரர் எத்தலத்தில் முதல் முதல் சந்நியாசியாசிரமத்தைக் கைக் கொண்டார் என்னும் வினா எழும். சேக்கிழார் பெருமான் சுந்தர மூர்த்தி நாயனார் மணக் கோலத்தை நீக்கிச் சந்நியாச வுடை பூண்டது கூறவில்லை யாயினும் உரையிற் கோடல் பொருந்து மாகையால்,

“ கீளார் கோவணமும்—திரு—
நீறுமெய் பூசியுன்றன்
தாளே வந்தடைந்தேன்—தலை
வா ! வெனை யாண்டுகொணீ !
வாளார் கண்ணிபங்கா !—மழப்—
பாடியுண் மாணிக்கமே !
ஆளாய் நின்னையல்லா—லினி—
யாரை நினைக்கேனே ”

என்னும் பாசுரத்தால் இப்பதியில் மணக்கோலத்தை நீக்கிக் கோவணவாடையுடன் முழு நீறு பூசிய முனிவராய் விளங்கினாரென, நாம் அநுமானிக்கலாகும். மணக்கோலத்துட னிருந்தவர் சில காலம் இல்லறம் நடத்திய பின்னர் மனைவாழ்க்கையை வெறுத்து முற்றும் துறந்த முனிவராய் விளங்கினார். இவர் திருக்கயிலாயஞ் சென்ற போதும் இவ்வாறே விளங்கினார்.

இந்திரன் மால்பிரமன்
எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளவென்னை
மத்தயானை யருள்புரிந்து
மந்திரமா முனிவரிவனா ?
ரென வெம்பெருமான்
நந்தமரூ ரனென்றான்
நொடித்தான்மலை யுத்தமனே !

---

## தைமாதக் கூட்டம்

நம் சமாஜத்திய தைமாதக் கூட்டம் மிகச் சிறப்பாக காரியதரிசியின் இல்லத்தில் 25-1-29 மாலை 6-15 முதல் 8 மணிவரை கனம் S. முத்தையா முதலியார் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தது. ஸர். சிவஞானம் பிள்ளை, திவான்பகதூர் P. சுப்பையா முதலியார், ராவ்பகதூர் மணலி சரவண முதலியார், திரு. P. S. ஐயா முதலியார் முதலியோர் வந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர். திரு. C. S. சுவாமிநாத முதலியார் “ சமயத்தின் சாரம் ” என்பது பற்றி ஆங்கிலத்தில் அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர். (அதன் மொழிபெயர்ப்பை மற்றொரு பக்கத்திற் காண்க.) பிறகு திரு. கி. குப்புச்சாமி முதலியார் ‘ சிவஞானபோதம் ’ பாடமாகத் தொடங்கினர். தலைவர் முடிபுரை, வந்தனை, கடவுள் வாழ்த்துடன் சபை கலைந்தது.

தி. க. சுந்தரம் பிள்ளை,
உதவிக் காரியதரிசி.

# மாணவர் பகுதி

## குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை

[R. M. அண்ணாமலை செட்டியார்]

### இல்லறம்—துறவறம்

மாணவன் :—குருமணியே! முன்னர் தங்களிடம் சம்பாஷணை செய்துகொண்டதில் அறிதற்கரிய உண்மைகள் பல தெரியலானேன். எனவே மீண்டும் சில உண்மைகள் தெரிய விரும்புகின்றேன். அவற்றை இப்போது கேட்கலாமா?

குரு :—மாணவனே! முன்னர் உன்னிடம் சம்பாஷித்த முறையில் நீ ஒரு நல்ல அறிவாளி என்று கண்டுகொண்டேனாதலால், இனி நீ கேட்கவேண்டியவைகளை எனக்கவகாசமுள்ள போதெல்லாம் வந்து கேட்டுக்கொள்ளலாம். ஆதலால் இப்போதென்ன தெரியவேண்டும்?

மா :—இல்லறம் பெரிதா, துறவறம் பெரிதா என்பதைத் தயவுசெய்து அருளிச் செய்ய வேண்டுகின்றேன்.

குரு :—முதலாவதாக இல்லறமென்றால் என்ன, துறவறமென்றாலென்ன வென்பதைத் தெரிந்து கொண்டாயா?

மா :— ஆம். தெரிந்துகொண்டேன்.

குரு :—எங்கே, சொல் பார்க்கலாம்.

மா :—இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கணின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடுஞ் செய்யப் படுவதாகிய அறம். துறவறமாவது மனைவி மக்களைத் துறந்து 'நச்சரவம் பூண்டானை நன்றாய்த் தொழுவதுவும் இச்சையிலே தானங்கிருப்பதுவும் பிச்சைதனைவாங்குவதும் உண்பதுவும் வந்து திருவாயிலிலே தூங்குவது மாய செயல்'களை மேற்கொண்டு நிற்றலாகிய அறம்.

குரு :—நீ கூறியதொக்கும். என்றாலும் அவ்விரு அறங்களின்றன்மையை மிகவும் விரிவாகத் தெரிந்து கொண்டாலல்லாமல் உண்மை காண்டல் கூடாதாகலின் ஈண்டாராயப் புகுவாம். முதலாவதாக ஆணவமலத்திலே கட்டுண்டு கிடந்த ஆன்மாவிற்கு ஏகதேச விளக்கத்தைச் செய்கின்ற அசுத்த மாயையின் காரியமாகிய உடலைக் கொடுத்து இவ்வுலகிற்குக் கொண்டு வருவதற்குத் துணை செய்வது இல்லறமேயாகும். அடுத்தபடியாக, பெறுதற்கரிய பிறவியாகிய இம்மானுட உடலைப்பெற்றவனது உடல் வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் துணை செய்வது இல்லறமேயாகும். மேலும் சுற்றத்தார்க்கும், முற்றத் துறந்த முனிவர்கட்கும், நல்கூர்ந்தார்க்கும், ஏனையோர்க்கும் அவரவர்கட்கு வேண்டுவனவாய உடுக்க உடையும், உண்ணச் சோறும், இருக்க இடமும், பிணிக்கு மருந்தும் முதலியனவற்றை உதவிப் பலரையும் அன்புடன் ஆதரிப்பதும் இல்லறமேயாகும். இவையேயன்றி துறவறத்தைப்போல மனத்தையும் பொறிகளையும் உறுத்தடக்க வேண்டாதே ஐம்புல இன்பங்களாரத் துய்த்தற்குப் போதிய வசதிசெய்து கொள்வதற்கும் இடந்தருவது இல்லறமேயாகும். இனித் துறவறமோ என்றால் மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களால் உண்டி சுருங்கலும், கோடைக்கண் வெயினிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர் நிலை நிற்றலுமாய செயல்களை மேற்கொண்டும், நாட்டையும் காட்டையும் ஒன்றாகப் பாவித்தும் காற்றையும் உதிர் சருகு கந்த மூலாதிகளையும் புசித்தும் அல்லது பிச்சையெடுத்துப் புசித்தும் பிறவுயிர்களால் தமக்குவருந் துன்பங்களையெல்லாம் பொறுத்தும் இன்னும் இவை போன்ற செயல்களை மேற்கொண்டு நிற்றல் துறவறமாகும். இவ்விரு அறங்களின் றன்மையையாராய்ந்து பார்க்குமளவில், இல்லறமானது கற்பாலத்தாலாற்றைக் கடப்பது போலவும் துறவறமானது நூற்பாலத்தா லாற்றைக் கடப்பது போலவுமிருக்கின்றது. எப்படிக் கற்பாலத்தா லாற்றைக் கடப்பது எளிதோ அப்படியே இல்லறமானது எளிதாகவும், எப்படி நூற்பாலத்தா லாற்றைக் கடப்பதருமையோ அப்படியே துறவறமான தருமையாகவுமிருக்கின்றது. இதை மற்றொரு விதமாகச் சொல்வதானால் இல்லறமானது பத்திய மில்லாது மருந்துண்ணுவதையும், துறவறமானது பத்தியத்துடன் மருந் துண்ணுவதையும் ஒத்திருப்பதாகச் சொல்லலாம். பத்தியமில்லாது மருந்து உட்கொள்வது எப்படி இலகுவாக இருக்கின்றதோ, அப்படியே இல்லறமானது இலகுவான வழியாகவும், பத்தியத்துடன் மருந்துட் கொள்வது எப்படிக் கடினமாக இருக்கின்றதோ, அப்படியே துறவறமானது கடினமான வழியாகவு மிருப்பதாகச் சொல்லலாம். பத்தியத்துடன் மருந்துட் கொள்வதால் காலம் நீட்டியாதென்ற நயம் ஒன்றை மாத்திரம் கருதுவோர் பத்தியப் பிழையேற்பட்டா லுண்டாகுங் கேட்டை யுன்னுவார்களாக. ஆதலினாலன்றோ "இல்லற மல்லது நல்லற மன்று" "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை யஃதும், பிறன் பழிப்பதில்லாயினன்று" என்று ஆன்றோர் திருவாக்குகளும் எழுந்தன? இனி இவ்வறங்கட்குப் பயனென்னையெனின் பிறவியாகிய துன்பத்தினின்றும் விடுபட்டு இன்பமே சொரூபமாக வுடைய இறைவனோடிரண்டறக் கலந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவதாகும். அதற்கு அவசியம் வேண்டப்படுவது யாதெனின் உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவன்பால் ஒப்புவித்து அவனிடம் உள்ளன்புடைமை கொண்டு யாது நிகழினும் எல்லாம் அவன் [illegible]

---

### மாசிமாதக் கூட்டம்

இக்கூட்டம் திருவொற்றியூர் சந்நிதி வீதி, மணலி முதலியார் அவர்கள் சத்திரத்தில் நாளது 1929ஆ பிப்ரவரிமீ 22உ வெள்ளிக்கிழமை மகிழடி சேவையன்று மாலை 3 மணிக்கு நடைபெறும். திரு. வி. உலகநாத முதலியார் "சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமணம்" என்பது பற்றியும், திரு. கி. குப்புச்சாமி முதலியார் "உத்ஸவாதிகளின் உட்கருத்து" என்பது பற்றியும், திரு. கா. சி. சிவசங்கர முதலியார் "உண்மை ஜீவகாருண்யம்" என்பது பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். அன்பர்கள் அனைவரும் வருக.

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.



187128

எண்ணி யொழுகுதலும் எல்லாவுயிர்கள் மாட்டும் அருளுடைமை கொண்டு நிற்றலுமாகும். ஆகையினாலே இவ்வாறு இறைபணியில் நிற்க மாட்டாதவர்க்கு இல்லறமும் பயனில்லை. துறவறமும் பயனில்லை. இறைபணி நிற்க மாட்டுவார்க்கோ இல்லறந் துறவற மிரண்டும் மேன்மையே. இதற்கு,

"சாட்டையிற் பம்பர சாலம் போலெலா
மாட்டு வாணிறை யெனவறிந்து நெஞ்சமே
தேட்ட மொன்றற வருட்செய லினிற்றி [யேல்
வீட்டறந் துறவற மிரண்டு மேன்மையே"

என்றும்,

"காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தை சுற்றி
யோடே யெடுத்தென்ன வுள்ளன் பிலாதவ ரோங்கு விண்ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு நல்லன்பர் நாரியற் பால்
வீடே யிருப்பினு மெய்ஞ் ஞானவீட்டின்ப மேவுவரே"

என்றும், முறையே அருளிய தாயுமான சுவாமிகளின் திருவாக்கும், பட்டினத்தடிகளின் திருவாக்கும் போதிய சான்றாகும்.

மா :—இதுகாறுங் கூறியவாற்றால் இல்லறமானது எல்லா நிலையினருக்கும் உபகாரமாக இருத்தலாலும், துறவறத்தைவிட இலகுவான வழியாக இருத்தலாலும் இல்லறமே சிறந்ததென்றும், இறைவனோ டிரண்டறக் கலத்தலாய பேரின்பப் பெருவாழ்வைப்பெறுதற்கு இறைபணியே காரணமாக இருத்தலால் இறைபணி நிற்க வல்லார்க்கு மாத்திரம் இல்லறம் துறவறமாகிய இரண்டும் தனித்தனியே முத்தியைக் கொடுக்கவல்லனவென்றும் உணரப்பெற்றேன். இஃதிங்ஙனமாயின் இல்லறமிருந்தே இறைபணி நின்று பலரும் வீட்டைவதைவிட்டுச் சிலர் துறவறஞ் சென்றும் இறைபணி நின்று வீட்டைந்தமைக்குக் காரணம் யாதோ?

குரு :—நன்று சொன்னாய்! ஓர் ஊரிலிருந்து பிறிதோர் ஊருக்குச் செல்வதற்குக் கற்சாலை வழி யொன்றும் புகைரதவழி யொன்று மிருப்பதாக வைத்துக் கொள்வோம். இவற்றில் உடல்வலி, மனோவலி வாய்க்கப் பெற்றவர்கள் கற்சாலை வழியாகவும், பொருள்வலி, துணைவலிவாய்க்கப் பெற்றவர்கள் புகைரத வழியாகவும் செல்லக்கூடுமன்றோ! அது போல எல்லாம் வல்ல இறைவன் திருவடியை யடைதற்கு இல்லறமாகிய வழி யொன்றும் துறவறமாகிய வழியொன்று மிருக்கின்றன. இவற்றில் பொருள் வலியும் துணைவலியும் வாய்க்கப் பெற்றவர்கள் இல்லறமிருந்தும், உடல் வலியும் மனோவலியும் வாய்க்கப் பெற்றவர்கள் துறவறமிருந்தும் வீடடைந்திருத்தல் கூடும். இவை யெலாமன்றி முற்பிறப்பில் நன்றாய் சாதனம் முற்றப் பெற்றவர்களாகிய சாமுசித்தர்களும் துறவற நெறியில் நின்று பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றிருத்தல் கூடும். ஆகையினாலே அவையெலாம் அந்தந்த ஆன்மாக்களின் பக்குவ நிலையைப் பொறுத் திருத்தலால் அதைப் பற்றிய சங்கை யொன்றுமில்லையென்க. இவ்வுண்மையை "ஆட்பாலவர்க் கருளும் வண்ணமுமாதி மாண்புங் கேட்பான் புகிலளவில்லை கிளக்க வேண்டா" என்றருளிய நமது சமயாச்சாரியாராகிய திருஞான சம்பந்தப் பெருமான் திருவாக்காலும் தெளியலாகும்.

மா: —மேல் வினாவிற் கிடமின்றி இல்லறம் பெரிதா, துறவறம் பெரிதா வென்று யான் கேட்ட கேள்விக்குத் தக்க விடை தந்தருளினீர்கள். இனி மற்றொரு கேள்விக்கு மாத்திரம் விடையளிக்கப் பிரார்த்திக்கிறேன். அது வினை வலிதா, முயற்சி வலிதா வென்பதாகும்.



குரு :—அன்பனே! நீ வினை வலிதா, முயற்சி வலிதா என்று கேட்பதானது வித்து முந்தினதா, மரம் முந்தினதா வென்று கேட்பதையே ஒத்திருக்கின்றது. எவ்வாறெனில் வித்தினின்றும் மரமும், மரத்தினின்றும் வித்தும் காரண காரியத் தொடர்ச்சியாக வந்து கொண்டிருத்தல் போல, வினையால் முயற்சியும், முயற்சியால் வினையும் காரண காரியத் தொடர்ச்சியாக வருவதோர் நிகழ்ச்சியாகும். ஆதலால் அவற்றினியல்புகளை விளக்கமாகத் தெரிந்து கொண்டாலல்லாமல் எது வலிதென்று கூறமுடியாதாகலின் ஒரு சிறிதாராயப் புகுவாம். வினை என்பது ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என மூவகைப்படும். அவற்றுள் ஆகாமியமாவது நல்வினை, தீவினை யென்னும் முயற்சி. சஞ்சிதமாவது அம்முயற்சி பலனுக்கு வாராமல் செய்தவன் புத்தி தத்துவத்திலும் மாயையிலும் கட்டுப்பட் டிருப்பது. பிராரத்தமாவது அம்முயற்சியின் பயனை யநுபவித்தல். இது எதுபோலவெனின் வித்தை நிலத்திலிடுதல் ஆகாமியம். அவ்வித்து இட்டவன் புத்தி தத்துவம் பற்றுக்கோடாகப் பலன்தரும் வரை பூமியயற்றங்கி யிருப்பது சஞ்சிதம். பலன் அநுபவத்திற்கு வருதல் பிராரத்தமாம். இங்கே கூறிப்போந்த பிராரத்தவினைக்குப் பெரியோர்களாலே பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. அவை, ஊழ், தெய்வம், விதி, வினை, பால், முறை, உண்மை யென்பனவாகும். இவ்வாறு ஒரே பொருளைக் குறித்தற்குப் பல பெயர்கள் வந்தமைக்குக் காரணம் யாதெனில் ஊழ் என்ற சொல்லிற்கே பழமையென்னும் பொருளிருத்தலால் ஒவ்வோருயிரும் கருப்புகு காலமாகிய முதல் நாளிலேயே வகுத்தான் வகுத்தவகை தானூழெனப்படும். அது தெய்வத்தாலூட்டப்படுதலின் தெய்வமெனவும், விதம் விதமாக வருதலின் விதியெனவும், அவனவன் செய்கை வழிக்கு வருதலின் வினையெனவும், நுகர்ந்து தீர்க்கத்தக்க பங்காக விருத்தலின் பால் எனவும், ஒழுங்காக நுகர்ந்து முடிதலின் முறையெனவும், உடம்பிருக்கு மளவும் உளதாந்தன்மையின் உண்மை யெனவும் பெயர் பெறுவதாயிற்று. இனி இவ்வினையானது முற்பிறப்பிலே நம்மாற் செய்து கொள்ளப்பட்ட நல்வினை, தீவினைகட் கீடாக அவற்றின் பயனாய இன்ப துன்பங்களை இப்பிறவியிலே யநுபவித்துத் தீரல் வேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனால் விதிக்கப்பட்ட விதியாகும். நம்மிறைவன் முற்றறிவும் முழு ஆற்றலும் உடையராக விருத்தலினாலும் நாமெல்லோரும் சிற்றறிவும் சிறு தொழிலுமுடையராக விருத்தலினாலும் விமலன் விதித்த விதியை நமது முயற்சியால் வெல்ல வல்லே மல்லேம். இவ்வுண்மையை நம் திருநாவுக்கரசு சுவாமிகள் இழவூழ் உற்ற காலத்தில் சமண்சமயம் புகுந்திருந்தமை கொண்டும், பின்னர் ஆகலூழ் உற்ற காலத்தில் சைவசமய மெய்தினமை கொண்டும் காணலாமன்றோ! எனவே, துறவு நிலை யடைந்தவர்களுங் கூட ஊழ் வினையை யநுபவித்தே தீரவேண்டு மென்றிருக்குமானால் நம்மனோராயினும் வேறு மன்னராயினும் எத்துணை ஆற்றலும் படைத்தவராயினும்

வினையினை நமது முயற்சியால் வெல்லுதல் கூடுமோ? கூடாது. இவ்வுண்மையை,

“ முதிர்தரு தவமுடை முனிவரா யினும்
பொதுவறு திருவொடு பொலிவ் ராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையா ”
—கந்தபுராணம்.

“ தாந்தா முன்செய்தவினை
தாமே யநுபவிப்பார்
பூந்தாமரையோன் பொறி
வழியே—வேந்தே
ஒறுத்தாரை என்செயலா
மூரெல்லா மொன்றா
வெறுத்தாலும் போமோ
விதி ”—நல்வழி.

“ ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும் ”
—திருக்குறள்.

முதலான நூல்களில் ஆன்றோர்களருளியது கொண்டும் காணலாகும். இனி மேற்கூறிப்போந்த வினையானது இன்ன காலத்தில் இவ்வாறநுபவிக்கப் படல் வேண்டு மென்பதை எல்லாம்வல்ல இறைவனையன்றி நாம் அறிய மாட்டோமாதலின் ஊழில்லையென்றும், ஊழிருந்தால் தானே வந்து சேருமென்றும் சொல்லிக்கொண்டு சோம்பேறித் தனமாகக் காலத்தை வீணுக்காவாறு ஒவ்வொருவரும் தம்மறிவைக் கொண்டு அறிய வேண்டுமவற்றை யறிந்துமெய்ம் முயற்சியுடையராக வொழுக வேண்டுவது கடமையாகும். அவ்வாறு முயலாதார் உலகினரால் பழிக்கப் படுதல் கூடுமென்க. ஏனென்றால் பயனைத் தருவதாகிய ஊழில்லாமையைப்பற்றி உலகம் பழியாது. ஈண்டைக் குற்றமுடைமைபற்றியே பழிக்குமாதலின் விடாது முயல்வதே கடமையாகும். இனி ஊழென்பது முற்பிறவியிலே நம்மாற் செய்யப்பட்ட முயற்சியென்று மேற்கண்டாமன்றே! அவ்வாறே இப்பிறப்பில் நம்மாற்செய்யப்படும் முயற்சி தானே மறுபிறப்பிற்கும் ஊழாதல் வேண்டும். ஆகையினாலே ஊழில்லையாயினும் நாம் செய்துகொண்ட முயற்சிக்குத் தக்க அளவாயினும் பயனில்லாமற் போகாதாகலின் யாண்டும் முயற்சி கைவிடற்பாலதன்று. இனி மிகப் பெரிய அறஞ் செய்தாரும், மிகப் பெரிய பாவஞ் செய்தாரும் முறையானன்றி இம்மை தன்னுள்ளே அவற்றின் பயனை யநுபவிப்பரென்பது அறநூற் றுணிபாதலாலே இடையறாதுற்ற உபாயத்தை நாடி முயலவல்லார்கள் பயனை விலக்குவதாய ஊழினையும் புறங்காண்பரென்க. இதற்குப் பதினாறு வயதிலே சாகும்படியான ஏற்பாட்டோடு பிறந்த மார்க்கண்டேயர் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானைப் பெரிதும் வேண்டி என்றும் பதினாறைப் பெற்றமையே தக்க சான்றாகும். இனி ஈண்டுக் கூறியவாற்றால் இடையறாத சிவத்தியான முடையவர் அச்சிவத்தையேயன்றிப் பிறிதொன்றையும் அறியாராதலின் ஊழ்வினை யவரைப் பாதியாமல் உடற் புசிப்பாகவே யொழியுமென்றும், ஏனையோரெல்லாம் ஊழ்வினையை யநுபவித்தே தீரவேண்டுமென்றும் உணரப்பெற்றாம். இதனை,

“ சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும் ”

என்று நமது ஔவைப் பிராட்டியாரருளியது கொண்டும் அறியலாகும்.

மா :— அருமணியே! தாங்கள் இதுகாறுங் கூறியவாற்றால் இறைபணி நிற்க வல்லார்க்கு விதியில்லையென்றும், ஏனையோர்க்கு விதி யுண்டென்றும் தெரிய வருவதால் வினையை முயற்சியால் ஒரு விதத்தால் வெல்லலாமென்றும், மற்றொரு விதத்தால் வெல்ல முடியாதென்றும் உணரப்பெற்றாம்.

---

# மகளிர் பகுதி

## ஔவை

[S. P. Y. சுரேந்திரநாத் ஆரியா, M.A., B.D., S.T.M.]

அநாதி காலந் தொட்டே நமது நாடு தத்துவ வுணர்ச்சியும் ஞான முதிர்ச்சியும் மிகுதியுமுடையதாய் இருந்து வருகிற தென்பதை நண்பர்கள், பகைவர்கள் என்ற இருதிறத்தாரும் ஒப்புக்கொள்வார்கள். இந்தியாவின் ஞானச்சுடர் அவியாமல் அடியடியாக ஒளிவீசிக்கொண்டே யிருந்து வருகிறது. காச்மீர நாட்டில் லல்லா என்ற யோகமடந்தையாலும், பஞ்சாப் நாட்டில் குரு நானக், கபீர் என்ற பக்தர்களாலும், சிவாஜி மன்னர் சீர்மையுட னமைத்த மராட்டா நாட்டில் ஞானபாய், பஹினாபாய், துக்காராம் என்ற அடியார்களாலும், காந்தியடிகள் வசிக்கும் கூர்ஜ்ஜர நாட்டில் மீராபாய், ஸஹஜாபாய், தயாபாய் என்ற உத்தமிகளாலும், ஆந்திர நாட்டில் வேமன்னா என்ற யோகியாலும் கன்னட நாட்டில் கனகதாசன் என்ற பெரியாராலும் மற்றும் நமது தமிழ் நாட்டிலோ ஔவை, திருமூலர், இராமலிங்க அடிகள்போன்ற தவமணிகளாலும் இச்சுடர் இடைவிடாது தூண்டப்பட்டு ஒளி வீசி வருகிறது. இவ்வாறு இப்பரந்த பாரத பூமியிடையில் பக்தியிற் சிறந்து ஞானசூரியர்களாய் விளங்கிய பெரியார்களிற் பெரும்பாலோர் பார்ப்பனரல்லாத ஆடவர்களும் மகளிருமாகவே இருக்க வாய்க்கப் பெற்றது இந்நாட்டின் தவப்பயனேயாம்.

### உண்மை ஞானி

அளவு வரை யற்றதாய், என்றும் நிலைத்துளதாய், அழிவற்றதாய் சத்யம், சிவம், சுந்தரம் என்ற மூன்று கல்யாண குணங்கள் நிறைந்ததாயுள்ள பரம்பொருள் உண்ணின் றுணர்த்த அவ்வருளொளியால் அப்பரம் பொருளின் பரிபூரண அறிவையும், ஆற்றலையும், அன்பையும் இம்மண்ணிடை நிலை நிறுத்த முயல்வதே உண்மை ஞானியின் உயர் நோக்கமாகும். பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தப் பரம் பொருளாய மௌன குரு பக்தர் தம் உள்ளத் தாமரையிற் பாங்கா யமர்ந்திருக்கும் மௌன குருவின் ஆணை வழியே அந்த உண்மை ஞானியின் மனம் வாக்குக் காயம் என்ற மூன்றும் செல்வதாகும். அன்றி அவனுக்குப் புறம்பாயும் குறுகிய நோக்கங் கொண்டும், குறைபாடுற்றதாயும் மனிதர்களால் அவ்வப்போது இயற்றப்படும் சட்டங்களும் இடப்படும் ஆணைகளும் அவனைக் கட்டுப்படுத்தா. தன்னை யறிந்து தன் விதியை வெல்ல முயலும் ஒருவற்கே ஆன்ம ஞானியின் ஆணை உரியதாகும். ஒரு காலத்திற்காக மட்டும் அவனது திருவாக்கி லெழுந்தவை உதவுவனவாகா; எக்காலத்திற்கும் ஏற்றதேயாகும். இன்றும் பின்னும் இருப்போரும் தோன்றுவோரும் உய்வதற்காகவே

அவனை யொத்தோர் இத்தரையிடைக் கிடந்து உழன்று உழைப்பதாகும். சிற்றின்பச் சேற்றில் அழுந்தாமல் என்றும் மாறுப்பேரின்பந் திளைத்து ஆண்டவன் கழலிணைகளில் ஆன்மாக்கள் அறிவை நிறுத்துமாறு உழைத்துவரும் ஜீவன்முக்தன் என்றே அவனைச் சொல்லலாம்.

உண்மை ஞானியே சமரசவாதி

ஒரு குலத்திற்குரிய நீதியையோ ஒரு நாட்டிற்குரிய நீதியையோ பழுதற வோதியுணர்ந்து அதன் வழிநின்று, வாலறிவனது ஒளித் தன்னுள் நுழைய இடங் கொடாமல் இருந்து வருபவர்களும் ஒருவகை ஞானிகளே யாவார்கள். ஆனால் அவர்கள் அக்காலத்திற்கும் அந்நாட்டினர்க்கும் ஞானியாவார்களே யன்றி எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கு முரிய ஞானியாக மாட்டார்கள். பேதங் கடந்த ஒற்றுமை பூண்டோரே உண்மை ஞானி. வகுப்பு வேற்றுமை, சமய வேற்றுமை முதலிய சழக்குகளைப் பெருக்கிவரும் புல்லர்களைப் பண்படுத்தி அறிவை வளரும்படிச் செய்ய அவர் முயலல் வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து மனிதனது தன் மதிப்பை நிலைநிறுத்தி இறைவனது இறைமைக் குணங்களை அவன்பெற முயலுதலுங் கூடும் என்பதை அவர் நன்கு விளக்கிக் கூறவேண்டும். சமரசமே உயர்ஞானம்.

ஔவையின் சமரசம்

அந்த சமரசக் கொள்கை நிறைந்தவரே நமது ஔவையார். வருணாசிரமக் கொடுங்கோல் நீதிகளுக்கு அவரது நூலில் இடங்கிடையாது. நல்லோர், தீயோர், இட்டார், இடாதோர்; கடவுளை நம்பினோர், மறந்தோர் என்றவர்களைப் பற்றியே அவர் கூற்றுகள் எழுந்தனவாகும். பெருமானருளாற் புன்மை யொழித்துத் தன்னலந்துறந்து இச்சை யொழிந்து, அறிவு வளர்ந்து அன்பு கனிந்து, அதன் பயனாய் அல்லலுறும் மக்களுக்கு ஆறுதலளிக்க முயல்வதே தன் பணி என்று அவர் கருதினார். அவர் பேசினதெல்லாம், பாடியதெல்லாம் அப்பரமனது புகழையேயாகும். ஊக்கமும் உழைப்பும் ஒருங்கே உடைய பெரியார் அவ்வம்மை; அறிவு சுருங்கி அறிந்ததே இல்லை; தீவிர அறிவும் தெளிந்த சிந்தையும் வாய்ந்தவர்; கடந்தஞானி; பழுத்த அறிவு வளர்ச்சியை யுடையார். இன் சொல்லும், நகை முகமும் ஆரவாரமற்ற நற்குணமுமுடையவர். அவருடைய பேராற்றல்களை யெண்ணும் போதெல்லாம் 'கவென்ட்ரி பாட்மோர்' என்ற ஆங்கிலக்கவி யெழுதிய "ஞானி" யென்ற பகுதி நினைவிற்கு வருகிறது. அதாவது:—

"ஞானிக்கும் மற்றை யோருக்கும் துணிந்த வேறுபாடுகள் ஒன்றும் புலப்படாது, இயற்கைக்கு விரோதமான நடவடிக்கைகள் ஒன்றும் ஒரு ஞானியின் மாட்டு வெளிக்குத் தோன்றாது. அவரோடு ஓரே இடத்தில் வசித்து வருகிறவர்களுக்குக்கூட அவர் தன்னைப் போல பாப ஆன்மா அல்ல என்பது எளிதிற் புலப்படாது. ஆனால் அவரது சாதுவான தன்மையும் கடுகடுப்பற்ற சிரித்த முகமும், எக்காலத்தும் உதவிபுரியச் சித்தமாயிருக்கும் எளிமையும் மனதிடைப் படாமற் போகா. என்ன இருந்தாலும் அவரும் ஒரு சாதாரண மனிதர்தான். அதிலும் ஒருவேளை நம்மிலும் தாழ்ந்த குணமுடையவராயிருக்கலாம் என்ற வுணர்ச்சிமட்டும் இருந்துகொண்டு தானிருக்கும். அதனால் அவரை யெதிர்த்து இகழலாம் என்று



நினைத்துக்கொள்ள வேண்டாம். ஏனெனில் எதிர்பாராத விதமாய் மிகவும் அமைதியோடு ஒரு பதில் வார்த்தை கூறித் தன்மாட்டு ஆண்டவன் குடிகொண்டிருக்கிறான் என்பதற் கறிகுறியான விழிப்பு நிலையைத் தெரியப் படுத்தலாம். அப்பொழுது அறிவின்றித் தூணில் மோதித் தலை நசுக்குண்டவன் கதியே நினைவிற்கு வரும்." என்பதே.

முற்றத் துறந்து முழுநீறு பூசி என்னை யுருக்கிப் பெருந் தவம் மியற்றுவதில் ஔவையாருக்கு அவ்வளவு விருப்பமில்லை. தன்னை வருத்தியும் அது காரணமாகக் கடுகடுத்த முகங் காட்டிக் கடுஞ் சொல்லுரைத்துப் பிறரை வருத்துவது அவர் மனங்கொள்ளாத தொன்றாகும். எல்லாம் நன்மைக்கே என நம்பிய பெரியாரில் அவரும் ஒருவர். கடந்த ஞானியும் முதிர்ந்த அறிவாளியுமான ஒருவர் உலகத்தை எவ்வளவு தூரம் விரும்ப வேண்டுமோ அவ்வளவு தூரம் அவரும் இவ்வுலகை விரும்பி வந்தார். சாதி, சமயம் என்ற வேற்றுமையின்றி ஆண் பெண்பாலாரிருவரிடையும் அவர் சமமாகப் பழகி வந்தார். தெய்வபக்தி மேலீட்டால் அவ்வன்னையார் அடைந்த ஆனந்த அநுபவங்களனைத்தும் அவரைச் சுற்றியிருந் தோரும் அனுபவித் துணருமாறு அருள்புரிந்து வந்தார். நீதியும், துணிவுமுடைய பெரியார் அவர் என்பது அவரது நீதி நூற்களால் அறியலாகும்.

வறுமையிலும் செம்மை யுற்றிருந்து நல்வழி காட்டி வந்தார். கடந்த மெய்ஞ்ஞானியாதலால் " நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம் " என்ற உண்மையை நன்கு தெரிவித்து வந்தார். ஊனென்னுங் கோட்டியால் ஓரைந்துங் காத்த உத்தமியே யவர். குன்றின் மேற் சமைத்த கற்கோட்டை யனைய அன்னாரது ஒப்பற்ற நீதியுரைகளும், ஈடற்ற நல்வாழ்வும், தமிழ்மொழி இவ்வுலகின் கண் செழித்து நிற்கும் வரையில் எடுத்துக்காட்டாக விளங்கி நிற்பனவாம்.

உடற் பயன்

உடலினாலாய பெரும் பயனையும் அது உயிருக்கு உய்வு அளிக்கப் பெரிதுமுதவுவதையும் அவர் நன்குணர்ந்திருந்தாரென்பது:—

1. உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லா முடம்பினி லுத்தமனைக் காண்.

2. உணர்வாவ வெல்லா முடம்பின் பயனே உணர்க உணர்வுடையார்.

3. ஒரு பயனாவ துடம்பின் பயனே தரு பயனாஞ் சங்கரனைச் சார்.

4. மாசற்ற கொள்கை மனதி லடைந்தக்கால் ஈசனைக்காட்டு முடம்பு.

5 உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே ஆயிர்ப்பின்றி யாதியை நாடு.

6. உடம்பினாற் பெற்ற பயனாவ வெல்லாம் திடம்பட வீசனைத் தேடு.

என்ற அவரது வாக்கியங்களாலே அறியலாகும்.

யாக்கையே ஆண்டவன் உறைவிடம்

பக்தர் உள்ளமே பகவன் விரும்பி வதியுந் திருக்கோயில்; அங்கு தான் அப் பரஞ்சோதி தூண்டா மணி விளக்கன்ன சுடர் கொளுத்தி நிற்கிறார். ஆகவே உடம்பை வருத்தியும், சிதைத்தும், மூட நம்பிக்கையும் போலி ஞானமுங் கொண்டு உடல் நலங் கருதாது உதறியும் வருவதனால் அப்பரம்பொருள் அத்தகைய ஓர் உடம்பி னுள்ளத்தில்

அமர்வதை விரும்பாரன்றோ? அவ்வாறு உலர்ந்து உதிர்ந்த யாக்கையில் உண்மையும் நன்மையும் திருவும் ஒருங்கே உருவாயமைந்த அளவிலாற்றலும், அறிவும் படைத்த பெருமான் வதிய மறுப்பானன்றோ ?

ஐம்பொறியும் ஐம்புலனுந் தூயவாக வைக்கப்பட்டிருந்தால்தான் சர்வ கல்யாணகுண சம்பன்னனாகிய இறைவன் யாக்கையுள் திருக்கோயில் கொண்டு அதைத் தன் கல்யாண மண்டபமாக ஆக்கிக்கொள்வான். "மெலிந்தார் நடராஜ மணியை யடைதலரிது" என்னும் பேருண்மையை அவ்வழிகளினால் தான் இறைவன் தன் ஞானச் சுடர்விளக்காகிய அறிவொளியினால் உலகின் மக்களுக்கு அறிவிக்கக்கூடும். சர்வ வல்லவராகிய எம்பெருமானை யகத்திடைப்பூங்கோயில் கொள்ளுமாறு செய்யவெண்ணும் எவரும் எலும்புந் தோலுமே கொண்ட ஒரு புல்லிய யாக்கையை வைத்திருத்தல் கூடாது. சர்வ சக்திமானான இறைவன் வதிதற்கு உடல் ஏற்றதாகவிருக்க வேண்டும். அதைவிட்டு இயற்கைக்கு மாறாக உடலை வருத்தி நோயை வளர்த்து அருவருப்பை விளைக்குமாறு செய்து கொள்ளுதலை எந்த உண்மைப் பக்தனும் விரும்பக் கூடாது. இதை யுணர்ந்தே ஓர் ஆங்கில அறிஞர் பின்வருமாறு எழுதுகிறார் :—

இயற்கை வனப்பும், இன்ப வுணர்ச்சிகளும் இறைவனது பேரருளை யடைதற்குறித்தே அமைக்கப்பட்டனவென்றுணராது அவையெல்லாம் உயிரைக் கெடுக்க வமைந்த சிற்றின்பமாகக் கொள்ளுதல் இறைவனது பேற்றை யடையும் வழியாகாது ; ஆனால் மனிதத் தன்மையை யிழக்கும் வழியேயாகும். இறைவனன்பு காரணமாக மக்களன்பைச் சிதைக்கும் ஒரு நியதி உண்மைப் பேற்றிலிருந்து உயிரைப் பிரித்து ஒரு பொய்யான உலகத்திடையே செலுத்துவதாகும். உயிர்கள்மாட்டன்புடைமை வேறு, இறைவன்மாட்டன்புடைமை வேறு என்று துண்டுபடத் துணித்துக் காட்டி, இயற்கை வனப்பிலெழும் தூய இன்பத்தை யழித்து, உடம்பு இறைவன் திருக்கோயில் என்று கொள்வதனாலுண்டாகும் உண்மை யுணர்ச்சியைத் துவைத்து நிற்பதைப் போன்ற பெருங்கேடு வேறொன்றுமில்லை."

உடல் வேறு, அறிவு வேறு என்று இரண்டுபடப் பிரித்து உடம்பினாலறிவு பெறுவது ஒன்றுமில்லையெனக் கொள்ளும் தீய சித்தாந்தத்தை ஜீவன் முக்தர்களும் மெய்ஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்டதில்லை.

"உடம்பா ரழியின் உயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்"

என்ற உண்மையை அவர்கள் நன்குணர்ந்திருந்தார்கள். ஓர் ஓட்டைக் குடம் நீரையேந்தி நிற்பது எவ்வாறு ? உடைந்த விளக்கு ஒளியைத் திறம்படப் பரப்புதல் முடியுமோ? அரும்பெருஞ் செயலாலும், கூரிய சிந்தனையாலும், முதிர்ந்த யோகப் பயிற்சியினாலுமே உண்மை ஞானியின் திறம் வெளிப்படும். அப்படியானால் இதற்கு, நல்லாரோக்கியமும், திட சரீரமும், திறமை மிகுந்த மனமும், சுட்டிக்காட்டப்படாத நல்வாழ்வும் வேண்டிய தவசியமன்றோ? இவை வேண்டுமானால் ஒருவன் தன்னுடைய சக்தியாற்றலை ஒருங்கு கூட்டிக் கொள்ளுதல் இன்றியமையாததன்றோ? உடம்பும் நரம்புந் தளர்வுற்ற காலைச் சக்தி யெழுந்து நிற்பது எங்ஙனம் ?

---



# சைவப் பெரியார் தனிக்கூட்டத்தின் அவசியமும் வேலையும்

[ச. சச்சிதானந்தம் பிள்ளை, B. A., L. T.,]

"ஞாலநின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆலவாயி லுறையுமெம் மாதியே"
—சம்பந்தர்.

உலகத்திற் பலநாடுகளில் நிகழ்வது போலவே நமது நாட்டிலும் சில்லாண்டுகளாய்ச் செல்வ நிலை, அரசியல், சமூக அமைப்பு, சமய வாழ்வு முதலிய பல துறைகளிலும் விரைவான மாறுதல்கள் உண்டாகி வருகின்றன. இவற்றுள், சமூக அமைப்பிலும் சமய வாழ்விலும் தமிழ் நாட்டில் ஏற்பட்டு வரும் குழப்பம் பெரிது. சமயமும் சமூக அமைப்பும் பிரிக்க முடியாதபடி பின்னிக்கொண்டிருப்பதுபோல் காண்டலால், சமூகத் திருத்தக்காரர்களில், சமூக குறைகட்குச் சமயமே காரணமென்று கொள்ளுவோர் அதைக் கண்டிப்பதைத் தம் கடமையாகக் கொண்டு அவ்வேலையைத் தீவிரமாய்ச் செய்து வருகின்றனர். சமய நூல்கள், சமயக் கோட்பாடுகள், சமய அநுட்டானங்கள், சமய அமைப்புகள் ஆகிய யாவும் இந்நாளில் மேதை மரியாதை சிறிதும் காட்டப்பெறாது வெகு கடுமையாய்ச் சோதிக்கப்படுகின்றன. அவற்றுள் ஏதாவது பொய்ம்மை கலந்திருக்குமாயின், அதை உதறிவிட்டு அடிப்படையான மெய்ம்மையைப் பலருமறிய நாட்டினாலன்றி, அவை விரைவில் மக்கள் நன்மதிப்பை இழந்து இழிவுபட்டொழிதல் ஒருதலை.

ஆனால் சமய நூல், கோட்பாடு, ஒழுகலாறு, அமைப்பு ஆகிய ஒவ்வொன்றிலும் கொள்ளத்தக்க பகுதி இது, கைவிடத்தக்க பகுதி இது என்று கணித்தற்குரியார் யாவர் ? இந்நாளில் எழும் பேச்சையும் எழுத்தையும் பார்க்கையில், கருத்து வேற்றுமை பலதிறத்ததாய்க் காண்கிறது. 'தலபுராணம் உள்ளிட்ட சமய நூல் ஒவ்வொன்றும், பிள்ளையார் சுழிமுதல் முற்றிற்று வரையில் முழு உண்மையே' என்று சத்தியஞ் செய்வோர் ஒரு கோடியில் உள்ளார்கள். 'இவை யாவும், வயிற்றுப் பிழைப்புக்காகவோ, மூளை கலக்கத்தாலோ எழுதப்பட்ட முழுப் புளுகுகள், புரட்டுகள் அல்லது பிதற்றல்கள்' என்போர் எதிர்க் கோடியிலுள்ளார்கள். இவர்கட்கிடையே பலவேறு கொள்கையுடையாருமுளர். எல்லோருக்கும் பத்திரிகைகளும் பிரசங்க மேடைகளும் உண்டு. பேச்செழுத்துரிமை மிக்க இக்காலத்தில் ஜனத் தலைவர்களும் வழிகாட்டிகளும் பலப்பலர். இவர்கட்குள் நிகழும் பூசல்களும் மிகப் பல. ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு வழியில் ஜனங்களை இழுக்க முயலும் போது, தாமே உண்மை காணமுடியாத பொது ஜனங்கள் திகைத்து விழிக்கின்றார்கள். பழையன கழிகின்றன; புதியன புகுகின்றன. மாறுதல்கள் எல்லாம் நன்மை என்றாவது தீமை என்றாவது சொல்ல முடியவில்லை. பண்டைச் சமய அமைப்புகளும் அநுட்டானங்களும் நன்மை செய்யுமாற்றல் சுருங்கிப் புறக்கணிக்கப்படுகின்றன. நாள் முழுதும் தமக்குள் சண்டை சச்சரவு செய்து கொண்டிருக்கும் இடையர்கள் கைப்பட்ட ஆடுகள்

போல் சமயச் சார்புள்ள மக்கள் நன்மை பெறுதொழிகின்றனர். இடையர் முகமே காணாத ஆடுகளும் பலவுள.

இப்படிப்பட்ட நிலைமையில் சைவமென்னும் பண்டைப் பெருஞ் சமயத்திற் பிறந்த அறிஞர்கள் செய்யவேண்டிய கடமை யாது? மக்கட்குற்றுள்ள இடர்ப்பாட்டை உளங் கொள்ளாதுவாளாகிடப்பதன்று; அது அருளொழுக்கத்திற்கு அடாது ஆதலின். சீர்திருத்தக்காரர்மேற் சீறி வீழ்வதுமன்று; பொதுநலங் கருதி யுழைக்கும் அவருட் சிறந்தாரும் இச்சீற்றத்திற் கஞ்சாது மீக்கொளச் சீறுதல் கூடுமாதலின். திருவருள் வலம் பெற்ற பெரியோன் அவதரித்தாற்றான் இச்சிக்கல் தீருமென்று வறிதே வருந்திக் கொண்டிருப்பதுமன்று; அத்தகைய பெரியோன் வரவிற்கும் வளையோர் தவமுயற்சி வேண்டியிருத்தலின். மற்றென்ன தான் செய்ய வேண்டும். அவரவர்க்குத் தோன்றியபடி பேசிக் கொண்டிருப்பதைவிட இப்போதுள்ள சைவர்களில், சமய நூல் வல்லோரும், சமய அநுட்டான உண்மையுணர்ந்து கைக்கொள்வோரும், சைவ அமைப்புகளாகிய கோயில், மடம், சபை, அடியார் கூட்டம் ஆகிய இவற்றின் குணங் குறைகளை அனுபவத்தில் நன்குணர்ந்தோரும், சைவ போதகர்களும், பிற நாட்டுச் சமூக சமய அமைப்பு வரலாறுகளை யறிந்த சைவ சமயிகளும் ஒன்று கூடி, தற்சமய நிலைமையை நன்காராய்தற்கு வழி தேட வேண்டுவதே முதலிற் செய்யற்பாலது.

இவ்வவசியத்தை உணர்ந்த சைவசித்தாந்த மகாசமாஜம் சென்ற டிசம்பர்மீ திருவாளர் திவான் பஹதூர் - ஸர். T. N. சிவஞானம் பிள்ளையவர்கள் தலைமையில் நடந்த தனது ஆண்டு நிறைவு விழாக் கூட்டத்தில் பின் வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது :—

"தமிழ் நாட்டின் சமய வாழ்விலும் சமூக வாழ்விலும் தற்காலம் காணும் குழப்பங்கட்கும், சைவ மக்களின் ஆற்றற் குறைவிற்கும் காரணங்களைச் செவ்வையாய் ஆராய்ந்து, இக்காலத்தின் தேவைகட்கும் சைவ சமயம் எப்படி ஏற்றதாயிருக்கிறதென்பதை யுக்தி அனுபவங்கட்கொப்பப் புலப்படுத்தி, சைவ உலகிற்கு இந்நாளில் நல்வழி காட்டியுதவும் பொருட்டுச் சைவ அறிஞர்களின் தனிக் கூட்டமொன்று கூடிய விரைவில் கூட்டப்படுதல் அவசியம் என்று இம்மகா சமாஜம் கருதுகின்றது."

இத்தீர்மானம் விரும்பும் தனிக் கூட்டத்தை, வரும் ஈஸ்டர் விடுமுறையில் கூட்ட மகாசமாஜக் காரியதரிசியார் முயற்சி தொடங்கி யுள்ளார். தீர்மானத்தில் நான்கு விஷயங்கள் குறிப்பிட்டுள்ளன :—

(க) தமிழ் நாட்டின் சமய சமூக வாழ்வில் குழப்ப மேற்பட்டிருப்பது ;

(உ) இவ்வாழ்வில் சைவ மக்களுக்குள்ள ஆற்றல் குன்றிக் காண்பது ;

(ங) சைவம் இந்நூற்றாண்டிற்கும் ஏற்ற சமயமாயிருக்கு முண்மை ;

(ச) க, உ-ன் காரணங்களை ஆராயவும், ங-ஐ யுக்தி அனுபவ வாயிலாய்ப் புலப்படுத்தவும் சைவ அறிஞர்களின் தனிக்கூட்டம் வேண்டிய அவசியம். இவற்றில் க, ச பகுதிகளைப்பற்றி மேலே கூறியிருப்பது சாலும். தற்கால சைவ மக்களின் ஆற்றற் குறைவைப்பற்றியும் விரித்துரைக்க வேண்டியதில்லை. அவரிற் பெரும்பாலோர் சமய ஞானமின்றிக் கெடுவதும், சமய அமைப்புகளின் நிலை திரிந்து நலிவதும், இக்கேடுகளைக் கண்கூடாகக் கண்டும் சமயப் பாதுகாப்புக்கான பெருமுயற்சிகளைச் சைவர்கள் ஒன்று சேர்ந்து பயன்படச் செய்யாது சுயநலச் சிறுவாழ்வு வாழ்வதும் அவர் தம் ஆற்றற் குறைவைப் புலப்படுத்துமென்க. ங-ம் பகுதியானது, தற்கால வாழ்க்கையின்



இயல்பை உலக சரித்திர ஞானங்கொண்டு உணர்ந்து, அதன் நன்மை தீமைக்கூறுகளை யாராய்ந்து, சைவசமயத்தின் உயிர்நாடியான பெருங்கொள்கைகள் உலக மேதாவிகளின் உயரிய நோக்கங்கட்கு எவ்வாறு அரண்செய்கின்றன என்பதை விளக்குமாறு கேட்கின்றது. மக்கள் அன்றாட வாழ்வைப் புனிதப்படுத்தி அவர்களைப் பெருநெறி பிடித்தொழுகச் செய்யாத சமயம் வீழ்ந்துபடுதல் திண்ணம். அவ்வாறுதவும் ஆற்றல் சைவத்திற்குளதென்பதைப் பிறநாட்டு நல்லறிஞரும் அவர் மொழிபயின்ற இந்தியரும் பேணி ஏற்கும் வகையில் ஆங்கிலப் பயிற்சியுள்ள தமிழ்ச் சைவமக்கள் புலப்படுத்துதல் அவசியம்.

இப்பெருங் காரியங்களைச் செய்து முடித்தல் எளிதன்று என்பது மெய்யே. ஆனால் உழைப்பின் வாரா உறுதிகளில்லை; முயன்றால் விழுப்பயன் விளையும். மேற்சொன்ன சைவ அறிஞர் கழகம் செவ்வனே நடைபெற்று நாட்டிற்கு நன்னெறி புலப்படுத்த வேண்டுமாயின், பல வசதிகள் தேவையாம். அவற்றுட் சில பின்வருமாறு :—

(க) சைவ சமய வளர்ச்சி விரும்பும் யாவரும் இக்கழகம் நன்முறையில் நடைபெற வேண்டுமென்று வாழ்த்தித் திருவருட்டுணை கோரி வழுத்த வேண்டும்.

(உ) கழகத்தில் சேர்ந்து தம்மறிவனுபவங்களால் கூட்ட நடவடிக்கைகளை வளம்படுத்தக்கூடிய அனைவரும் எப்பாடுபட்டேனும், போதிய ஆயத்தத்தோடு ஷை கூட்டத்திற்குப் போந்து துணை செய்ய வேண்டும்.

(ங) வருவோர், இதுவரை தாம் தாம் கொண்டதே சரியென்றும், அதை நிலை நாட்டுதலே கடனென்றும் முடிவு கட்டிக் கொண்டு வாததர்க்க மிடுதலிற் பயனில்லை. தாழ்வெனுந் தன்மையோடு போந்து, இத் தனிக் கழகத்தின் வாயிலாகத் திருவருள் நமக்கோர் பெருங்குறிப்பை யுணர்த்துதல் கூடுமென்று மதித்து, தம் கருத்துக்களில் அவசியமான மாறுதல்களை மனச்சான்று காட்டும் வழி செய்துகொள்ளச் சித்தமாயிருக்க வேண்டும். எக்காரணத்தாலும் கூட்டத்தின் ஒற்றுமையைக் காத்து, பொது ஜனங்கட்கு இக்கழகம் தெளிவாக நல்வழி புலப்படுத்தும்படி அதன் வேலைகளை ஒழுங்குற நடத்த வேண்டும்.

(ச) சில நாள் எல்லையில் இக்கூட்டம் தனது பெரிய வேலைகளைச் செய்து முடிக்க வேண்டியிருத்தலால், பொழுதை வெகு செட்டாகப் பயன்படுத்த வேண்டும். ஆராய வேண்டிய பொருள்களைப்பற்றிக் கூட்டத்திற்கு வருவோ ரனைவரும் முன்னமே தெரிவித்தல் நலம்.

(ரு) இப்பொருள்களைக் கேள்விகள் வாயிலாகச் சுட்டுவதோடு, அறிஞர்கள் அவற்றைப்பற்றி இப்போது கொண்டுள்ள கருத்துக்களைப் பதில் எழுதும் வாயிலாகப் பெற்றுக்கொண்டு, அவற்றை ஒல்லும் வகையில் தொகுத்து ஷை கூட்டத்தில் ஆயத்தப் படுத்துதல் நலம்.

(சா) காய்தலுவத்த லகற்றி உண்மை காணும் ஒரே நோக்கத்தோடு அவசியமான ஆராய்ச்சிகள் செய்த பின்னர், பெரும்பாலோர் தீர்மானத்தைக் கழகத்தின் முடிபுகளாகக் கொள்ள வேண்டும். சிறுபான்மையோர் முக்கியமான விஷயங்களில் கருத்து வேற்றுமை கொண்டு அதை வெளியிட வேண்டுமென்று விரும்பினால் அவ்வாறும் செய்ய வேண்டும்.

(எ) இக்கழகத்தார் செய்யும் முடிவுகளையும், ஆலோசனைகளையும் புத்தகம், பத்திரிகை, பிரசுரம் எனுமிவற்றின் வாயிலாகத் தமிழ் நாடெங்கணும் பரப்ப வேண்டும்.

(அ) இயன்ற மட்டில் சைவ மகாஜனங்களும் தனி மனிதர் கருத்தைவிட அறிஞர் பேரவையின் கருத்தே உயர்ந்ததென்றுணர்ந்து, இம்முடிவுகளை நன்கு மதித்துப் பின்பற்ற முயல வேண்டும்.

ஆராயப்பட வேண்டிய பொருள்களைக் கேள்வி வடிவில் எழுதியனுப்புதல் ஓரளவு சாதகமா யிருக்குமென்று மேலே குறிக்கப்பட்டது. அவைகட்கு எடுத்துக் காட்டுக்களாய்த் தமியேனுக்குத் தோன்று[illegible]வைகளுள் சில குறிக்கத் துணிகின்றேன் :—

(க) நல்லொழுக்கம் வளர்க்கும் நாகரிகத்திற்குச் சமயம் அவசியமா?

(உ) அவசியமாயின் சமய வாழ்வின் இயல்பு என்னை ?

(ங) இந்நூற்றாண்டில் எத்தகைய சமயம் தேவை ?

(ச) சைவசமயம் அச்சமயமாயிருக்க முடியுமா ?

(ரு) சைவ சமயத்தின் இன்றியமையாக் கோட்பாடுகளும் அநுட்டானங்களும் எவை?

(கூ) சமயத்துக்குப் பிரமாண நூல் அவசியந்தானா?

(எ) அவசியமென்னில், சைவத்திற்குப் பிரமாண நூல் யாது?

(அ) தற்கால சரித சமய இலக்கிய ஆராய்ச்சி வல்லார் கூறுவதையும் உளங்கொண்டு பார்க்கின், சைவ சமயப் பிரமாண நூல்களை எவ்வகையில் எம்மட்டில் கொள்ளுவது?

(கூ) உயிரோடுள்ள பிற சமயங்களோடு சைவம் ஒத்துழைக்க வேண்டிய அளவும் முறையும் என்ன?

(க0) சைவர்கள் தமது சமயத்தைப் போதியவளவு பாதுகாவாது, தம் சமய சகோதரர்களைப் பிற சமயம் தழுவவோ, நாத்திகராய் நழுவவோ விட்டுக் கொண்டிருப்பதெதனால்?

(கக) சைவர் தொகை சுருங்குவதைத் தடுக்க வேண்டியது அவசியந்தானா?

(கஉ) அவசியமாயின் வழிவகை என்ன?

(கங) தமிழ்நாடு நீங்க, மற்றைய நாடுகளிலும் சைவக் கொள்கையைப் பரப்ப வேண்டியது அவசியமா?

(கச) அவசியமென்னில், காரணமென்ன, வழிகளெவை?

(கரு) கோயில்கள், மடங்கள், சைவத் திருக்கூட்டங்கள் ஆகிய இவற்றைச் சைவ சமய வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளுவதெப்படி?

(கசா) சைவ மக்களுக்குள் சமய ஒற்றுமையும் பற்றும் உண்டாக்க வழியென்ன?

(கஎ) ஜாதிக்கும் சைவத்திற்கும் உள்ள சம்பந்தமென்ன?

(கஅ) தற்கால ஆசார சீர்திருத்தத்துக்குச் சைவம் எம்மட்டில் துணை செய்யவல்லது?

(ககூ) தீண்டா வகுப்பினர்க்குச் சமய உரிமை எவ்வளவில் தரப்படவேண்டும்?

(உ0) ஆலய மட பரிபாலனத்திலும், உற்சவ முறைகளிலும், சைவ மகாஜனங்கள் அங்கு வழிபடும் பழக்க வழக்கங்களிலும் ஏதேனும் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமா?

(உக) அத்திருத்தங்களெவை?

(உஉ) அவற்றை எப்படிச் செய்வது?

(உங) புறமதம் புக்கோரை மீண்டும் சைவத்தில் சேர்க்கலாமா?

(உச) ஆமெனின் எம்முறையில்?

(உரு) இவ்விஷயங்களில் சைவசித்தாந்த மகாசமாஜம் என்ன செய்யவேண்டும்?

இவைபோன்ற கேள்விகள் இன்னும் பல எழுப்பலாம். சிறியேனது சுருங்கிய அறிவுக்கேற்பச் சில குறித்தேன். பல அறிஞர்கள் இவ்வழி சிந்திக்கில் இன்னும் பல அவசியமான கேள்விகள் பிறக்கலாம்.

இவற்றையெல்லாம் அன்பும், பணிவும், உண்மை நாட்டமும், ஒற்றுமையுணர்ச்சியும் பொருந்திய மனத்தோடு அறிஞர்கள் ஆராய்ந்து, தம் கழக முடிபுகளை உலகிற்குத் தெரிவித்தல் பேருபகாரமாகும் என்பது வெளிப்படை.

சைவப் பெரியோர்கள், கழகத்தின் ஆராய்ச்சிக் குரியனவென்று தாம் கருதும் கேள்விகளை, 1-3-29-க்குள் மஹா சமாஜக் காரியதரிசி யவர்கட்கு எழுதி அனுப்பும்படி வேண்டுகின்றேன். அன்றியும், அக்கழகக் கூட்டத்திற் கலந்து கொள்ளற்கு அழைத்தற்குரிய அறிஞர்கள் பெயர் விலாசங்களையும் ஒரு பட்டியிற் குறித்தனுப்பவும் கோருகின்றேன். அவர்கட்குச் சமாஜ நிருவாக சபையினர் பின்பு அழைப்புக் கடிதமனுப்புவர். வேறு யோசனைகள் தோன்றினும் பெரியோர்கள் காரியதரிசிக்குத் தெரிவித் தருள்வார்களாக. "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்", "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னு மொழிகள் நம்மை நன்முயற்சியில் ஊக்குவனவாக.

---

குறிப்பு :—நம் சமாஜத்து உதவித்தலைவர் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் எழுதியவற்றை ஆலோசித்து பேரறிஞர்களும் சமயத் துறையில் தொண்டுபுரியும் சபைகளும் தங்கள் கருத்துக்களைக் கீழே காணும் விலாசத்துக்கு விரைவில் தெரிவிக்க விரும்புகிறேன். திருநெல்வேலி நகரத்தில் ஈஸ்டர் விடுமுறையில் (28-3-1929 முதல் 2-4-1929 வரை) சைவர் மகாநாடு கூட்ட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இங்ஙனம்:
ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி,
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்பநாய்க்கன் தெரு, சென்னை.

187128


# கந்தபுராணம்

## வசனம்

முருகப் பெருமான் திருவவதாரத்தைப் பற்றி உரைக்கும் நூல்கள் யாவற்றினும் சிறந்தது கந்த புராணமே ஆகும். அதுவே முருகவேள் வரலாற்றை முற்ற முடிய நவரசம்பொருந்த இனிய தமிழ்ச் செய்யுட்களால் சைவ சித்தாந்த நெறி திறம்பாமல் கூறிச் செல்கின்றது. கந்த புராணத்தைச் சைவர் படனஞ் செய்தலோடு அமையாது பூசித்தும் வழிபாடு செய்கின்றனர். பிற சமயத்தாரும் முருகனை வழிபட்டும் அவன் அற்புத மான்மியம் நனி விளங்கும் திருப்புகழ்ப் பாடல்களை இசையுடன் ஓதியும் இன்புற்று வருகின்றனர். ஆதலால் கந்தன் அருமை பெருமைகளை அனைவரும் அறிய வேண்டுவது இன்றியமையாததாகும். கந்த புராணம் செய்யுள் வடிவத்திலே பரந்து இருத்தலின் அதனைப் பயிலுவோர் இலக்கண இலக்கியப் பயிற்சி உடையவராக இருந்தால் அன்றி அது மிக்க பயன் விளைக்க மாட்டாததாகும். இப்போதுள்ள வசன நூல்களும் மிக விரிந்தும் செய்யுட்களின் போக்கைத் தழுவாமலும் எழுதப்பட்டிருக்கின்றன. இக்குறையெல்லாம் நீங்கும் பொருட்டும் கந்தர் சஷ்டி விரதம் அனுட்டிப்போர் ஆறு நாட்களில் முழுதும் பாராயணம் செய்து முடித்துச் சித்தியடையும் பொருட்டும் பொருத்தமாக இந்நூல் தெள்ளிய இனிய செந்தமிழ் நடையிலே கந்தபுராணச் செய்யுட்களின் கருத்துக்களையும் முறைமையையும் தழுவிச் சுருக்கமாகத் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்து மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் மாணவர் வித்துவான் ஸ்ரீ முத்துக்கிருஷ்ண ரெட்டியார் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இதனைப் படிப்போர் மனமுருகி அன்பு வயப்பட்டு முருகதாசர்களாக விளங்குவார்கள் என்பது திண்ணம். இத்தகைய அரிய நூலிலே கண்ணுக்கினிய திருவுருவப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனைப் பெண்பாலாரும், சிறுவரும், முதியோரும் எளிதில் படித்து உணரலாகும். இது தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசி, பக்தித் தேன் சொட்டி ஞானங் கனிந்து நிற்றலைக் கண்டு அன்பர் களி துளும்புவார்களாக.

| | | | |
|---|---|---|---|
| ரப் பேப்பர் கலிக்கோ பைண்டு விலை | ரூ. | 2 | 0 0 |
| கிளேஸ் பேப்பர் | ,, | ,, | 2 8 0 |

தபால் கூலி வேறு

**கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,**
புத்தக வியாபாரிகள், திருவல்லிக்கேணி, சென்னை.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரில்லாத

# அமிர்த குணபோதினி

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S. G. இராமாநுஜலு நாயுடு
அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

*அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜக விநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தா தாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமா யிருப்பது எது? எங்கள் "அமிர்த குண போதினி"யே. 56-பக்கங்களுடன் ஒரே ரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப்பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாதப் பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளிநாடு ரூ. 1—4—0. மாதிரி காப்பி இனும்!*

1-9-28. தி. இராஜகோபால் முதலியார்,
28-2-29. அமிர்த குணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

---

*ஆங்கிலேயம் படிக்க விரும்பும் அன்பர்களே! என் கவலைப் படுகிறீர்கள்?*

உபாத்தியாயர் இல்லாமல்
60 நாளில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.
7,50,000 ஜனங்களால் வாசித்துப் பிரபல்யமடைந்த

# ஆங்கில ஆசான்

அல்லது

# ஆங்கில போதினி

தமிழ் எழுத்துக்களை வாசித்தால்
இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 10-ம் பதிப்பு; 800 பக்கங்களுக்கு மேல் கொண்ட
ஒரு பெரிய புத்தகம்.

*உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்று தான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இப்பத்தாம் பதிப்பில் 1 அணாவிலிருந்து 3000 ரூபா வரையில் மிக சிரமப்பட்டு மாதச் சம்பளக் கணக்கு போடப்பட் டிருக்கிறது.*

முழு கலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. **2.**

*நமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.*

போலி புத்தகங்களால் ஏமாற வேண்டாம்.




1-9-28. தி. இராஜகோபால் முதலியார்,
28-2-29. நெ. 302, தங்கசாலை தெரு, சென்னை.

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.